
கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை மார்ச் 2011 ₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 3, இதழ் 4

ஏப்ரல் 2011

2 கிருஷ்ண உணர்வின் அவசரத் தேவை

8 சித்திரகூடம்

13 இராமாயணக் கேள்வி பதில்கள்

18 கிணற்றுத் தவளை

20 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம்—பாகம் ஐந்து

24 பிரபுபாதர் நூற்றந்தாதி

27 விஞ்ஞானிகள்—முன்னேறிய அசுரர்கள்

30 ஸ்ரீமத் பாகவதம்

## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், மதுமதி பிரியா தேவி தாஸி, ராதா மதுராபதி தாஸ், ராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** கேசவன்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, மும்பை.

**பதிப்பகத்தார் அலுவலகம்:** ஹரே கிருஷ்ண நிலம், ஜுஹு சாலை, மும்பை - 400 049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# கிருஷ்ண உணர்வின் அவசரத் தேவை

வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

தற்போதைய உலகில் ஆன்மீகம் அழிந்து வருகிறது; இருப்பினும், உண்மையான ஆன்மீகத்தை வழங்கி மனித சமுதாயத்தைக் காப்பாற்றுவதே கிருஷ்ண பக்தி இயக்கத்தின் மிக முக்கிய குறிக்கோளாகும். மனித சமுதாயம் ஆன்மீக அறிவற்ற தலைவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டு வருகிறது. தன்னையறிவதும் தனக்கும் முழுமுதற் கடவுளுக்கும் இடையிலான உறவை வளர்த்துக் கொள்வதுமே மனித வாழ்வின் குறிக்கோள் என்பதை இத்தலைவர்கள் அறிவதில்லை. அக்குறிக்கோள் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்கு எமது கிருஷ்ண பக்தி இயக்கம் முயன்று வருகிறது.

## சேவை செய்தல்

அனைத்து ஆன்மீகவாதிகளாலும் வேத அறிவின் அஸ்திவாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பகவத் கீதையிலிருந்து, மனிதர்கள் மட்டுமின்றி அனைத்து உயிர்வாழிகளுமே கடவுளின் அம்சங்கள் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். கைகள், கால்கள், காதுகள் போன்ற உறுப்புகள் அதோடு தொடர்பு கொண்ட முழு உடலுக்கு சேவை செய்வதைப் போல, கடவுளின் அம்சங்களான நாம் (உயிர்வாழிகள்) அவருக்கு சேவை செய்ய கடமைப்பட்டுள்ளோம்.

உண்மையில், நாம் ஒவ்வொருவரும் யாராவது ஒருவருக்கு (குடும்பத்திற்கு, தேசத்திற்கு அல்லது சமுதாயத்திற்கு) எப்பொழுதும் சேவை செய்து கொண்டுள்ளோம். எவரும் இல்லாவிடில், நாய், பூனை போன்ற வளர்ப்பு மிருகங்களுக்கு சேவை செய்கிறோம். நமது உண்மையான நிலை சேவை செய்வதே என்பதை இவை நமக்கு உணர்த்துகின்றன. நம்மால் முடிந்த வரை நன்றாக சேவை செய்தாலும் நாம் திருப்தியடைவதில்லை, நமது சேவையை ஏற்றவர்களும் திருப்தியடைவதில்லை; அனைவரும் விரக்தியுடனே இருக்கின்றனர். செய்யப்படும் சேவையானது சரியான வழியில் செல்லாததே இதற்கு காரணம். உதாரணமாக, மரத்திற்கு சேவை செய்ய விரும்பினால், இலைகளுக்கும் கிளைகளுக்கும் கொம்புகளுக்கும் நீரூற்றுவதால் முழுபலன் கிடைக்காது; வேருக்கு நீரூற்ற வேண்டும். அதுபோல, முழுமுதற் கடவுளுக்கு சேவை செய்வதால் அனைவரும் திருப்தியடைவர்; பொதுநலத் தொண்டுகள், சமூகம், குடும்பம், மற்றும் தேசத்திற்கான தொண்டுகள் என அனைத்துமே முழுமுதற் கடவுளுக்கு சேவை செய்வதன் மூலம் அடையப்படுகிறது.

## நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு

நமக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு மட்டுமே உண்மையான உறவு என்பதைப் புரிந்து கொண்டு அதன்படி நடப்பதே நமது கடமை; அவ்வாறு நாம் செயல்பட்டால் நமது வாழ்க்கை வெற்றியடையும். ஆனால் சில சமயங்களில், "கடவுள் இல்லை",



வேருக்கு நீரூற்றுவதால் மரத்தின் அனைத்து பகுதிகளும் திருப்தியடைவதுபோல, முழுமுதற் கடவுளுக்கு சேவை செய்வதால் அனைவரும் திருப்தியடைவர்.


‘‘நானே கடவுள்’’, ‘‘கடவுளைப் பற்றி எனக்குக் கவலையில்லை’’ என்று சிலர் சவால் விடுவதும் உண்டு. இவ்வாறு சவால் விடுவதால் யாரும் காப்பாற்றப்படப் போவதில்லை. கடவுள் இருப்பதை ஒவ்வொரு கணமும் நம்மால் காண முடியும். வாழும்பொழுது கடவுளை ஏற்க மறுத்தால், கொடூரமான மரணத்தின் வடிவில் அவர் நம்முன் தோன்றுவார். நாம் அவரை ஒரு குறிப்பிட்ட உருவத்தில் காண விரும்பாவிடில், வேறொரு உருவத்தில் அவரை நாம் காண வேண்டிவரும். விஸ்வரூபத்தின் மூல காரணமாகத் திகழும் முழுமுதற் கடவுளுக்குப் பல்வேறு ரூபங்கள் உள்ளன. வேறுவிதமாகக் கூறினால், அவரிடமிருந்து யாரும் தப்பிக்க முடியாது.

இந்த அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் கண்மூடித்தனமான மதவெறியோ புரட்சிகரமான புது அமைப்போ அல்ல. மாறாக, உன்னத அனுபவிப்பாளரான முழுமுதற் கடவுளுடனான நமது நித்திய உறவை அறிய உதவும் விஞ்ஞானப்பூர்வமான முயற்சியாகும். இறைவனுடனான நமது நித்திய உறவைப் பற்றியும் அவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் விளக்குகின்றது. இப்பிறவியிலேயே உயர்ந்த பூரணத்துவத்தை அடைய கிருஷ்ண உணர்வு உதவுகின்றது.

பல்வேறு உடல்களைக் கடந்த பின்னர், பரிணாம வளர்ச்சியில் ஆத்மா மனித உடலை அடைந்துள்ளது என்பதை நாம் எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். விலங்குகளைக் காட்டிலும் மனித உடலில் இருக்கும்போது, பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு எளிதாகத் தீர்வு காண முடியும். நாய்கள், பன்றிகள், ஒட்டகங்கள், கழுதைகள் என மற்ற விலங்குகளுக்கும் நம்மைப் போலவே பொருளாதாரப் பிரச்சனைகள் உண்டு. ஆனால் அவற்றின் பொருளாதாரத் தேவைகள் அடிப்படையானவை; மாறாக, மனிதர்களுக்கோ மிகவும் வசதியாக வாழ்வதற்கேற்ற வாய்ப்புகள் இயற்கையின் நியதிப்படி கொடுக்கப்பட்டுள்ளன.

## மனிதர்களின் கடமை

பன்றிகள் அல்லது மற்ற மிருகங்களைக் காட்டிலும் சிறப்பான வசதிகள் மனிதர்களுக்கு ஏன் கொடுக்கப்பட்டுள்ளன? சாதாரண குமாஸ்தாவைக் காட்டிலும் பெரிய பதவியிலுள்ள அரசாங்க ஊழியருக்கு சிறந்த வசதிகள் ஏன் கொடுக்கப்பட்டுள்ளன? இதற்கான விடை மிகவும் எளிமையானதாகும்: சாதாரண குமாஸ்தாவைக் காட்டிலும் ஓர் உயரதிகாரி மிகுந்த பொறுப்புள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார். அதுபோலவே எப்போதும் தனது வயிற்றுப்பசியைத் தீர்ப்பதற்காக சுறுசுறுப்புடன் இயங்கும் விலங்குகளைவிட மனிதர்களுக்குப் பொறுப்பான கடமைகள் உள்ளன. ஆனால் மிருகத்தனமான நவீன நாகரிகம், வயிற்றை நிரப்பும் பிரச்சனையை அதிகமாக்கிவிட்டது. மிருகங்களைப் போல வாழும் மனிதர்களிடம் ‘‘ஆன்மீக வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளுங்கள்’’ என்று அணுகினால், கடவுளைப் பற்றி அறிய வேண்டிய அவசியம் இல்லையென்றும் வயிற்றுக்காக மட்டுமே உழைக்க விரும்புவதாகவும் பதிலுரைக்கின்றனர். உழைப்பதற்கு அவர்கள் ஆவலுடன் உள்ளபோதிலும், வேலையில்லாத் திண்டாட்டமும் இயற்கையின் நியதிகளால் ஏற்படும் இதர இன்னல்களும் மறையவில்லை. இன்னல்களுக்கு மத்தியிலும் கடவுளைப் பற்றிய உண்மைகளை ஒப்புக் கொள்ளாமல் பகிரங்கமாக கண்டனம் தெரிவிக்கின்றனர்.



இந்த மனித உடல் வாழ்வின் பூரணத்துவத்தை அடைவதற்காகவே நமக்கு அளிக்கப்பட்டுள்ளது; நாய்களையும் பன்றிகளையும் போன்று கடினமாக உழைப்பதற்காக அல்ல. பூரணத்துவத்தை அடைவதில் விருப்பமின்றி இருப்போர், இயற்கையின் பலவந்தத்தின்படி கடினமாக உழைக்க வேண்டிவரும். கலி யுகத்தின் இறுதி நாள்களில் மக்கள் ஒருபிடி உணவிற்காக கழுதையைப் போல உழைப்பர் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்நிலை இப்போதே ஆரம்பமாகிவிட்டது. குறைந்த கூலிக்கு அதிக நேரம் உழைக்க வேண்டியநிலை வருடந்தோறும் மோசமாகிக் கொண்டே போகும்; இருப்பினும், கழுதையைப் போல கடினமாக உழைக்க வேண்டிய அவசியம் மனிதனுக்கு இல்லை. மனிதன் அவனுக்குரிய கடமைகளைச் செய்யாவிடில், இயற்கையின் சட்டத்தால் கீழ்நிலை உயிரினங்களுக்குத் தள்ளப்படுகிறான்.

## உயர்குடியில் பிறத்தல்

கிருஷ்ண உணர்வில் முழு வெற்றியடையாத நபர்கள், தங்களது அடுத்த பிறவியில், ஆன்மீகத்தில் முன்னேறிய அல்லது பொருளாதாரத்தில்

தழைத்தோங்கும் குடும்பங்களில் பிறப்பதாக பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. ஆன்மீகப் பாதையில் வெற்றியடையாதவர்களுக்கே உயர் குடியில் பிறப்பளிக்கப்படும்போது, வெற்றி பெற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி, முழுமையடையாமல் போனாலும், அடுத்ததாக ஒரு நற்பிறவிக்கான உத்திரவாதம் அளிக்கப்படுகின்றது. ஆன்மீகவாதிகளின் குடும்பத்தில் பிறந்தாலும் சரி, பொருளாதாரத்தில் நல்ல நிலையிலுள்ள குடும்பத்தில் பிறந்தாலும் சரி, முற்பிறவியில் ஒருவர் கைவிட்ட இடத்திலிருந்து ஆன்மீகப் பயணத்தைத் தொடர அஃது உதவுகின்றது. நற்குடியில் உள்ள சாதகமான சூழ்நிலையினால் ஆன்மீக ஞானத்தை எளிதில் வளர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு அதிர்ஷ்டம் வாய்ந்த சூழ்நிலையில் பிறந்தவர்களிடம், அந்த நல்லதிர்ஷ்டம் அவர்கள் தங்களது முற்பிறவியில் செய்த பக்தியின் பலனே என்பதை பகவத் கீதை நினைவுபடுத்துகின்றது. துரதிர்ஷ்டவசமாக, உயர்குடியில் பிறந்த குழந்தைகள், மாயையின் வசப்பட்டிருப்பதால் பகவத் கீதையை அணுகுவதில்லை.

உயர்குடியில் பிறப்பதால், உணவுப் பிரச்சனையும் மற்ற பிரச்சனைகளும் தீர்வது மட்டுமின்றி, வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே வசதியான வாழ்வு அமைகின்றது. அத்தகு செல்வந்தர்களின் குழந்தைகள் ஆன்மீகப் பாதையில் முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்புள்ளபோதிலும், துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய இரும்பு யுகத்தின் (கலி யுகத்தின்) தாக்கத்தினால், புலனின்பத்தை நோக்கித் தவறாக வழிநடத்தப்பட்டு, தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நல்வாய்ப்பினை மறந்துவிடுகின்றனர். ஆகையால், அவர்களின் தங்க மாளிகைகளை இயற்கை தனது நியதிப்படி தீக்கிரையாக்கி விடுகிறது. அசுரனான இராவணனின் ஆட்சியில் இலங்கை என்னும் தங்க நகரம் எரித்து சாம்பலாக் கப்பட்டது. இதுவே இயற்கையின் நியதி.

## பிரச்சனைகளைத் தீர்த்தல்

பகவத் கீதை, கிருஷ்ண உணர்வு என்னும் தெய்வீக விஞ்ஞானத்திற்கான ஆரம்பப் பாடமாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி உட்பட இதர செயல்களுக்கும் பகவத் கீதையின் ஆலோசனையின்படி முடிவெடுக்க வேண்டியது, அனைத்து பொறுப்புள்ள தலைவர்களின் கடமையாகும். ஆனால் நிலையற்ற பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பது எங்களது (கிருஷ்ண பக்தி இயக்கத்தின்) கடமையல்ல; மாறாக, இயற்கையின் நியதிகளால் தோன்றும் வாழ்வின் உண்மையான பிரச்சனைகளைத் தீர்ப்பதே எங்களின் கடமை. ஆன்மீக இயக்கத்தின் வழிகாட்டுதல் இல்லையெனில் நாகரிக முன்னேற்றம் இருக்க முடியாது. ஆத்மா உடலை இயக்குகின்றது, உயிருள்ள உடல் இவ்வுலகத்தை இயக்குகின்றது. தற்போதைய சமுதாயத்தில் உடலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது, ஆனால் அவ்வுடல் இயங்குவதற்கு காரணமான ஆத்மாவைப் பற்றிய அறிவு சமுதாயத்திடம் இல்லை. ஆத்மா இல்லாவிடில் உடல் இயங்காது, மடிந்துவிடும்.

## மனித உடல் என்னும் படகு

நித்தியமான வாழ்வை அடைவதற்கு மனித உடல் ஒரு சிறந்த சாதனமாகும். இது பௌதிக வாழ்க்கை என்னும் அறியாமைக் கடலைக் கடந்து செல்ல உதவும் கிடைத்தற்கரிய படகாகும். இப்படகு ஆன்மீக குரு என்னும் மிகச்சிறந்த படகோட்டியால் இயக்கப்படுகிறது, தெய்வீக அருள் என்னும் சாதகமான காற்றினால் நீரில் முன்னோக்கிச் செல்கின்றது. இத்தகு மங்களகரமான சூழ்நிலையில் அறியாமைக் கடலைக் கடப்பதற்கான வாய்ப்பினை யார் நழுவ விடுவர்? இந்த நல்வாய்ப்பினைத் தவறவிடுபவன், தற்கொலை செய்துகொள்பவனாக அறியப்பட வேண்டும்.

ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியில் அதிக வசதிகள் இருப்பது உண்மையே; இருப்பினும் சேர வேண்டிய இடத்தை நோக்கி ரயில் செல்லவில்லையெனில், குளிர்சாதன வசதியினால் என்ன இலாபம்? தற்போதைய நாகரிகம்



ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியில் அதிக வசதிகள் இருப்பது உண்மையே; இருப்பினும் சேர வேண்டிய இடத்தை நோக்கி ரயில் செல்லவில்லையெனில், குளிர்சாதன வசதியினால் என்ன இலாபம்?

## மனித உடல் என்னும் படகை பந்தப்படுத்தியுள்ள நங்கூரம் போன்ற பற்றுதல்களிலிருந்து விடுபடுவதற்கான வழி பகவத் கீதையில் விளக்கப்பட்டுள்ளது.

வசதியான வாழ்விற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கிறது, முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதே வாழ்வின் உண்மையான குறிக்கோள் என்பதைக் கண்டு கொள்வதில்லை. வசதியான பெட்டியில் வெறுமனே அமர்ந்திராமல், ரயில் அதன் இலக்கை நோக்கி நகர்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆன்மீக வாழ்வை மீண்டும் அடைவதே வாழ்வின் முக்கியத் தேவை என்பதை மறந்து, பௌதிக வாழ்வை வசதியாக்கிக் கொள்வதில் எந்தப் பலனும் இல்லை. மனித உடல் என்னும் படகு, ஆன்மீக இலக்கை நோக்கி முன்னேறுவதற்குத் தகுந்தாற் போல அமைக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக பௌதிக உணர்வு என்னும் நங்கூரத்துடன் ஐந்து கயிறுகளால் இவ்வுடல் கட்டப்பட்டுள்ளது. அவை: (1) ஜடவுடலின் மீதான பற்றுதல் (2) உறவினர்களின் மீதான பற்றுதல் (3) பிறந்த மண்ணின் மீதும் பௌதிக உடைமைகளான வீடு, நிலம், வியாபாரம் போன்றவற்றின் மீதுமான பற்றுதல் (4) பௌதிக விஞ்ஞானத்தின் மீதான பற்றுதல் (5) முழுமுதற் கடவுளைப் பற்றியும் அவரது தூய பக்தர்களைப் பற்றியும் அறிந்துகொள்ளாமல் மதச் சடங்குகளின் மீது வைக்கப்படும் பற்றுதல்.

மனித உடல் என்னும் படகை பந்தப்படுத்தியுள்ள இந்த பற்றுதல்களைப் பற்றி பகவத் கீதையின் பதினைந்தாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஆழமாக வேரூன்றிய வண்ணம் பூமியில் தனது பிடியை எப்போதும் அதிகரித்துக் கொண்டிருக்கும் ஆலமரத்திற்கு இஃது ஒப்பிடப்படுகிறது. அத்தகு ஆலமரத்தை வேரோடு எடுப்பது மிகவும் கடினமான காரியம், ஆனால் பகவானின் பரிந்துரை என்னவெனில், "இம்மரத்தின் உண்மை உருவம் இவ்வுலகில் காணப்படக்கூடியதல்ல. இஃது எங்கே முடிகின்றது, எங்கே தொடங்குகின்றது, அல்லது இதன் அஸ்திவாரம் எங்கே இருக்கின்றது என்பதை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் பலமாக வேரூன்றியுள்ள இந்த மரத்தை பற்றின்மை எனும் ஆயுதத்தால் உறுதியுடன் வெட்டிச் சாய்க்க வேண்டும். அதன் பின்னர், எங்கே செல்வதால் மீண்டும் திரும்பி வருவதில்லையோ, அந்த இடத்தை நாடி, அங்கே யாரிடமிருந்து எல்லாம் தொடங்குகின்றதோ, யாரிடமிருந்து எல்லாம் விரிவடைகின்றதோ, அந்த பரம புருஷ பகவானிடம் சரணடைய வேண்டும்," (பகவத் கீதை 15.3-4)

### கொள்கைகள்

விஞ்ஞானிகளாலும் மனோதத்துவ கற்பனையாளர்களாலும் உலகத்தின் அமைப்பைப் பற்றி எந்தவொரு முடிவிற்கும் வர முடியவில்லை. பல்வேறு கொள்கைகளை உருவாக்குவதைத் தவிர வேறு எதையும் அவர்களால் செய்ய இயலவில்லை; பௌதிக உலகம் உண்மையானது என்று சிலரும், கனவைப் போன்றது என்று சிலரும், நிரந்தரமானது என்று வேறு சிலரும் கூறுகின்றனர். இவ்வாறு பலவிதமான கருத்துகளை வெளியிட்டாலும், பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் அதன் எல்லைகளை எவரும் கண்டறியவில்லை. பிரபஞ்சம் எப்போது தோன்றியது, அஃது எவ்வாறு அந்தரத்தில் மிதக்கிறது என்பதை எவரும் அறியார். புவியீர்ப்பு விதிகளைப் போன்று பல விதிகளைத் தோற்றுவித்தாலும் அவற்றை நடைமுறை வாழ்வில் பயன்படுத்த முடிவதில்லை. உண்மையைப் பற்றிய உண்மையான அறிவின்றி, புகழுக்காக தங்களது சொந்தக் கோட்பாடுகளை உயர்த்திக் கூறுவதில் விஞ்ஞானிகள் முனைப்புடன் இருந்தாலும், இந்த பௌதிக உலகம் முற்றிலும் துன்பம் நிறைந்தது என்பதே உண்மை. வெறுமனே சில கொள்கைகளை உருவாக்குவதால் துன்பத்தை யாராலும் தவிர்க்க முடியாது.

### ஆன்மீக உலகை அடைதல்

தனது படைப்புகளைப் பற்றி பூரணமாக அறிந்துள்ள முழுமுதற் கடவுள், துன்பமயமான வாழ்வை விட்டு வெளியேறுவதற்கான விருப்பமே நமது சிறந்த விருப்பம் என்று கூறுகிறார். பௌதிகப் பொருள்களிலிருந்து நாம் நம்மை முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டும், மோசமான நமது நிலையை சாதகமாக மாற்றிக் கொள்ள நூறு சதவிகிதம் ஆன்மீகத்தில் ஈடுபட வேண்டும். இரும்பும் நெருப்பும் ஒன்றல்ல; ஆனால் இரும்பு நெருப்புடன் தொடர்ந்து இருந்தால் அதுவும் நெருப்பாக மாறுகிறது. அதுபோலவே, பௌதிகச் செயல்களிலிருந்து விடுபடுதல் என்பது ஆன்மீகச் செயல்களில் ஈடுபடுவதால் மட்டுமே சாத்தியமாகும், செயலற்ற தன்மையால் அல்ல. செயலற்ற தன்மை என்பது பௌதிகச் செயல்பாட்டின் எதிர்நிலையாகும். ஆன்மீகமாகச் செயல்படுவது என்பது பௌதிகமாகச் செயல்படாமலிருப்பதோடு மட்டுமின்றி நமது உண்மையான இயற்கையைத் தட்டி எழுப்புவதுமாகும். ஆன்மீக உலகை அடைவதிலும் நித்தியமான வாழ்வைத் தேடுவதிலும் நாம் ஆவலுடன் இருக்க வேண்டும். நித்தியமான ஆன்மீக உலகங்களுக்குச் சென்றவர்கள் திரும்பி வருவதில்லை என பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. அந்த ஆன்மீக உலகங்களே பகவானின் இருப்பிடமாகும்.

நமது பௌதிக வாழ்க்கை எப்போது தோன்றியது என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடியாது, பந்தப்பட்ட நமது பௌதிக நிலையை அறிந்துகொள்ள முயல்வதும் அவசியமற்றதாகும். நினைவிற்கெட்டாத காலத்திலிருந்து தொடர்ந்து வரும் இந்த பௌதிக வாழ்க்கையை உணர்ந்து காரணங்களுக்கெல்லாம் காரணமான பகவானிடம் சரணடைவதே நமது கடமை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பரம புருஷ பகவானிடம் சரணடைவதற்குத் தேவையான அடிப்படை குணங்களைப் பற்றி பகவத் கீதையில் (15.5) பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ‘‘பொய் கௌரவம், மயக்கம் மற்றும் தவறான சங்கத்திலிருந்து விடுபட்டு, நித்தியத்தைப் புரிந்து கொண்டு, பௌதிக காமத்தை நிறுத்திவிட்டு, இன்ப துன்பம் என்னும் இருமையை ஒழித்து, மயக்கமுறாமல் இருப்பவர்கள், பரம புருஷரிடம் சரணடைவது எவ்வாறு என்பதையறிந்து, அந்த நித்திய இருப்பிடத்தை அடைகின்றனர்.’’ எவரொருவர் தனது பௌதிக இயற்கையிலிருந்து விடுபட்டு, ஆன்மீக இயற்கையில் நம்பிக்கை கொண்டு, மயக்கத்திலிருந்து விடுபட்டு, முக்குணங்களுக்கு அப்பாற்பட்டு, தெய்வீக ஞானத்தைப் புரிந்துகொள்வதில் ஈடுபட்டு, புலனின்பத்தை முற்றிலும் துறந்துள்ளாரோ, அவர் பரம புருஷ பகவானிடம் செல்ல முடியும். அவரை *அமூடா* என்பர். *மூடா* என்றால் முட்டாள் என்று பொருள்; *அமூடா* என்பவர் இருமைகளிலிருந்து விடுபட்டவர். பகவானுடைய இருப்பிடத்தின் தன்மைகள் யாவை? ‘‘எனது அந்த பரம வாசஸ்தலம் சூரியனாலோ, சந்திரனாலோ, நெருப்பினாலோ, மின் சாரத்தாலோ ஒளியூட்டப்படுவது இல்லை. அதனை அடைபவர்கள் ஒருபோதும் இந்த ஜடவுலகிற்குத் திரும்புவதில்லை.’’ (பகவத் கீதை 15.6)

எல்லாவற்றிற்கும் உரிமையாளர் இறைவனே என்பதால், படைப்பு முழுவதும் அவரது இருப்பிடமே; இருப்பினும், அவரது சொந்த இருப்பிடம் நாம் வசிக்கும் இவ்வுலகைவிட முற்றிலும் வேறுபட்டதாகும். அஃது ஓர் உன்னத இருப்பிடம். நமது பூமியில்கூட வாழ்க்கைத்தரம் உயர்ந்த நாடுகள், வாழ்க்கைத்தரம் குறைந்த நாடுகள் என்று உள்ளன. பூமியைத் தவிர பல்வேறு கிரகங்கள் இப்பிரபஞ்சத்தில் பரவிக் கிடக்கின்றன. அவற்றில் சில உயர்ந்த கிரகங்கள் என்றும், சில தாழ்ந்தவை என்றும் அறியப்படுகின்றன. பகவானின் வெளிப்புற சக்தியான இந்த ஜடவுலகம், ஓர் இருள் நிறைந்த பிரதேசம் என்பதால், உயிரினங்கள் வாழ சூரியன் அல்லது நெருப்பின் ஒளி தேவைப்படுகிறது. பௌதிக உலகங்களுக்கு அப்பால் இருக்கும் ஆன்மீக உலகம், முழுமுதற் கடவுளின் உயர்சக்தியால் இயங்குகிறது. ‘‘சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்,



சூரியனாலோ சந்திரனாலோ நெருப்பினாலோ ஒளியூட்டப்படாத வைகுண்ட லோகத்தின் ஒரு தோற்றம்

மின்சாரம், நெருப்பு போன்ற ஒளிரும் பொருள்களின் அவசியம் அங்கு இல்லை, ஆன்மீக உலகங்கள் ஆன்மீக ஒளியின் பிரதிபலிப்பால் ஒளியூட்டப்படுகின்றன. ஆன்மீக இயற்கை சுய பிரகாசமுடையதால் அடர்ந்த இரவிலும் பிரகாசமான ஒளியைக் காணலாம்,'' என்று ஆன்மீக உலகங்களைப் பற்றி உபநிஷத்துகள் விவரிக்கின்றன.

``பௌதிக, ஆன்மீக உலகங்கள் பிரம்மஜோதியின் பிரகாசத்தினால் ஒளியூட்டப்படுகின்றன. இருப்பினும், பாரதனே, அந்த பிரம்மஜோதியானது எனது உடலின் பிரகாசமே என்பதை அறிவாயாக,'' என்று ஆன்மீக இயற்கையைப் பற்றி ஹரி வம்சத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பிரம்ம சம்ஹிதையும் இதனை உறுதி செய்கிறது. பௌதிக விண்கலன்களின் உதவியால் ஆன்மீக லோகங்களை அடையலாம் என்று எண்ண வேண்டாம். கிருஷ்ண லோகத்தை அடைந்தவர் தடையில்லாத ஆன்மீக ஆனந்தத்தை அடைவது உறுதி. தவறிழைக்கக்கூடிய உயிரினங்களாகிய நாம் இரண்டு நிலைகளில் வாழலாம்: ஒன்று, பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் போன்ற துயரங்கள் நிறைந்த பௌதிக இயற்கை; மற்றொன்று, அறிவும் ஆனந்தமும் நிறைந்த நித்தியமான தடையற்ற வாழ்வை வழங்கும் ஆன்மீக இயற்கை. பௌதிக இயற்கையில் இருக்கும்போது, ஜடவுடலாலும் மனதாலும் நாம் ஆளப்படுகிறோம். ஆனால் ஆன்மீக இயற்கையில் பரம புருஷருடனான திவ்யமான உறவில் நாம் எப்பொழுதும் ஆனந்தமாக வசிக்கலாம், அங்கு பரம புருஷர் நம்மைவிட்டுப் பிரிவதே இல்லை.

## முடிவுரை

ஆன்மீக இயற்கையை மக்கள் மத்தியில் கொண்டுவர இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் முயற்சி செய்து வருகிறது. பௌதிக உணர்வில் இருக்கும் நாம் புலனின்பத்தை அடிப்படையாகக் கொண்ட பௌதிக வாழ்வில் கவரப்படு கிறோம். அத்தகு பௌதிக எண்ணம், கிருஷ்ண உணர்வில் (பக்தித் தொண்டில்) ஈடுபடும்போது உடனடியாக நீக்கப்படுகிறது. பக்தித் தொண்டின் நியமங்களை ஏற்றுக்கொள்பவர், பௌதிக வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், ஸத்வ, ரஜோ, தமோ குணங்களிலிருந்து விடுதலை பெற்று, திவ்யமான தளத்தினை உடனடியாக அடைகின்றனர். பௌதிக வாழ்வில் ஈடுபட்டுள்ளோர் கிருஷ்ண பக்தி இயக்கத்தின் புத்தகங்களிலிருந்தும் *ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின்* பக்கங்களி லிருந்தும் அபரிமிதமான பலனைப் பெறலாம். இந்த இலக்கியங்கள் பௌதிக வாழ்வு என்னும் வேரூன்றிய ஆலமரத்தினைத் தகர்க்க உதவுகின்றன. பௌதிகத்துடன் இணைந்த வாழ்வைத் துறந்து ஆன்மீக அமிர்தத்தை சுவைப்பதற்கு அவை நமக்குப் பயிற்சி யளிக்கின்றன. பக்தித் தொண்டால் மட்டுமே இவை சாத்தியமாகும். பக்தித் தொண்டில் ஈடுபட்டுள்ளவர், வாழ்ந்து கொண்டிருக்கும்போதே முக்தி பெற்றவ ராவார். பெரும்பாலான ஆன்மீக முயற்சி களில் பௌதிக வாசனை கலந்துள்ளது. ஆனால் தூய பக்தித் தொண்டு பௌதிகக் களங்கங்களுக்கு அப்பாற்பட்ட திவ்யமான ஒன்றாகும். முழுமுதற் கடவுளிடம் செல்ல விரும்புவோர் இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தின் நியமங்களைக் கடைபிடித்து ஸ்ரீ கிருஷ்ணரின் தாமரைத் திருவடிகளில் முழு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

(தமிழாக்கம்: அமுதவல்லி தேவி தாஸி)

---

## பெயர் மாற்றம் ஏன்?

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை பகவத் தரிசனம் என்று பெயர் மாற்றம் செய்யப்படுவதாக அறிவிப்பு வந்துள்ளது. பெயர் மாற்றத்திற்கான காரணத்தை தெரிந்துகொள்ளலாமா? உள்ளிருக்கும் தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் இருக்குமா? (கணேஷ், மதுரை)

## எமது பதில்

இதே போன்ற கேள்விகளை மேலும் சில வாசகர்களும் கேட்ட காரணத்தினால் இதற்கான பதிலை பிரசுரிக்க கடமைப்பட்டுள்ளோம். பெயர் மாற்றத்திற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

1. இஸ்கான் அமைப்பின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் தனது Back to Godhead பத்திரிகை தத்துவப்பூர்வமாகவும் விஞ்ஞானப்பூர்வமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதன்படி இப்பத்திரிகையில் பல்வேறு தத்துவக் கருத்துகள் விஞ்ஞானப்பூர்வமான முறையில் விளக்கப்பட்டு வருகின்றன. *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்* என்னும் பெயரைக் காணும் சிலர் இப்பத்திரிகை ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கானது என்றும், மதம் சார்ந்த மற்றுமொரு சாதாரண பத்திரிகை என்றும், தத்துவப்பூர்வமான பத்திரிகையல்ல என்றும் எண்ணுவதாகத் தெரிகிறது. எனவே, பாகவத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இப்பத்திரிகைக்கு *பகவத் தரிசனம்* என்னும் பெயர் மிகவும் பொருத்தமானதாகும்.

2. இந்திய மொழிகளில் வெளிவரும் Back to Godhead பத்திரிகையின் பதிப்புகள் *பகவத் தரிசனம்* என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் வழிகாட்டியுள்ளார். அதன்படி நமது *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்* தற்போது *பகவத் தரிசனம்* என்று மாற்றப்படுகின்றது.

மேற்கூறியவை மட்டுமின்றி, இந்தி, குஜராத்தி, வங்காளம், ஒரியா, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் *பகவத் தரிசனம்* என்று ஏற்கனவே அறியப்படும் இப்பத்திரிகை, பெயர் மாற்றத்தின் மூலம் ஓர் ஒற்றுமையை வெளிப்படுத்தும்.

பெயர் மாற்றத்தின் காரணத்தினால் உள்ளிருக்கும் தகவல்களில் எந்தவொரு மாற்றமும் நிகழப் போவதில்லை என்பதை வாசகர்களுக்கு உறுதியளிக்கின்றோம்.

# சித்திரகூடம்

## பகவான் ஸ்ரீ இராமரின் குடில்

**அயோத்தியாவில் இருந்து வெளியேற்றப்பட்ட பகவான் ஸ்ரீ இராமசந்திரர் பன்னிரண்டு ஆண்டுகள் மகிழ்ச்சியுடன் வசித்த அழகிய புனித ஸ்தலம்.**

வழங்கியவர்: தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி

பகவான் ஸ்ரீ இராமர் தன் பத்தினி சீதாதேவியுடனும் தம்பி இலட்சுமணருடனும் சித்திரகூட வனத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். அவர்கள் இங்கு எவ்வாறு வாழ்ந்தார்கள், என்ன செய்தார் கள் போன்ற தகவல்கள் இராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன.


பகவான் ஸ்ரீ இராமர் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டி யிருந்தது. அவர் இலட்சுமணருடனும் சீதாதேவியுடனும் வனத்தில் நுழைந்த போது, எங்கே தங்க வேண்டும் என்பதை பரத்வாஜ முனிவரிடம் வினவினார். பரத்வாஜ முனிவர் தன்னுடைய ஆஷ்ரமத்தில் இருந்து பத்து மைல் தொலைவிலுள்ள சித்திரகூடத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

சித்திரகூடத்தில் இருந்த ரிஷிகள் அனைவரும் பகவான் ஸ்ரீ இராமர் அங்கு வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்து வந்தனர். "இராட்சஸர்களினால் (மனிதர்களை உண்பவர்களால்) இவ்வுலகம் பெரும் தொந்தரவுக்கு உட்பட்டுள்ளது. ஸ்ரீ இராமர் அயோத்தியிலேயே வசித்து வந்தால், அசுரர்களை அழிக்கும் தன்னுடைய பணியை அவரால் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?" என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர்.


ஸ்ரீ இராமர் சித்திரகூடத்திற்கு வந்த சமயத்தில், இராட்சஸர்கள், ரிஷிகளைத் தாக்கித் துன்புறுத்தி, அவ்விடத்தின் அமைதியான சூழ்நிலையைக் கெடுத்து வந்தனர். ஆதலால், ஸ்ரீ இராமர் அங்கு தங்கியிருந்தபோது பல்வேறு இராட்சஸர்களைக் கொன்றார்.

ஸ்ரீ இராமர் வனவாசத்திற்குக் கிளம்பிய சமயத்தில், அவருடைய தம்பி பரதன் அயோத்தியில் இல்லை; வெளியே சென்றிருந்தார். பரதன் அயோத்திக்குத் திரும்பி வந்தபோது, ஸ்ரீ இராமர் இல்லாத நிலையில் தான் மன்னராக வேண்டும் என்ற செய்தியைக் கேட்டு அதிக கலக்கம் அடைந்தார். ஸ்ரீ இராமர் திரும்பி வந்து அரசாட்சியை ஏற்க வேண்டும் என்று இராமரிடமே வேண்டுவதற்காக, பரதன், மிகப்பெரிய பரிவாரங்களுடன் சித்திரகூடம் சென்றார். அங்கே அவர்கள் இருவரும் சந்தித்த இடம், இராம-பரத மிலாப் என்ற பெயரில் இன்றும் ஞாபகச் சின்னமாக விளங்குகிறது.

ஸ்ரீ இராமரின் வனவாசத்தால் பரதன் மிகவும் வருத்தமுற்றார்; ஆனால் ஸ்ரீ இராமரோ சிறிதும் பாதிக்கப்படாமல் இருந்தார். ஸ்ரீ இராமர் மீண்டும் அயோத்திக்குத் திரும்பி வர வேண்டும் என்று பரதன் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்; அவருடன் வந்திருந்த பலரும் அதனை ஆமோதித்தனர்.



புனிதமான குப்த கோதாவரி நதி உற்பத்தியாகும் குகையிலுள்ள சிவபெருமானின் பஞ்சமுக விக்ரஹமும், சேவை செய்யும் சாதுவும்



ராம-காட் வழியாகப் பாயும் மந்தாகினி கங்கையின் தோற்றம்; சித்திரகூடத்தின் பெரும்பாலான கோவில்கள் இப்பகுதியில்தான் உள்ளன.

ஆனால் ஸ்ரீ இராமரோ தொடர்ந்து இராஜ்ஜியத்தை மறுத்தார்: "இல்லை, நான் என் தகப்பனாருக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். அது மிகவும் முக்கியமானது."

இறுதியில், தன் மாமனார் ஜனக மஹாராஜரிடம் முடிவை ஒப்படைத்த ஸ்ரீ இராமர், "மாமன்னர் ஜனகர் மிகவும் அனுபவசாலி, தெய்வ நம்பிக்கையுள்ளவர், நிபுணர். நான் இங்கேயே சித்திரகூடத்தில் தங்கியிருந்து வனவாசத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமா, அயோத்திக்குத் திரும்பிச் சென்று அரசாட்சியை ஏற்க வேண்டுமா என்பதை அவரே முடிவு செய்யட்டும்," என்று கூறினார்.

பகவானின் நோக்கத்தை அறிந்த ஜனக மஹாராஜர், ஸ்ரீ இராமர்







சித்திரகூடத்தில் உள்ள விக்ரஹங்களில் சில. **மேலே:** ஆஞ்சநேயர்; **இடப்பக்கம் மேலே:** சீதா ராம லக்ஷ்மண ஹனுமான்; **இடப்பக்கம்:** ஜகந்நாதர், பலதேவர், சுபத்ரா



**மேலே:** மந்தாகினி கங்கையின் ஒரு பகுதியான ஜானகி குண்டம். ஜானகி தேவி (சீதா தேவி) சித்திரகூடத்தில் வசித்தபோது நீராடிய இடம்
**கீழே:** ஸ்படிக் சீல என்னும் இடத்தில் பகவான் ஸ்ரீ இராமரின் திருவடிகளை யாத்திரிகள் தரிசிக்கும் காட்சி



**மேலே:** ஹனுமான் குன்றிலுள்ள சிறிய கோவிலின் விக்ரஹங்கள். ஸ்ரீ இராமருக்கும் இலக்ஷ்மணருக்கும், சீதாதேவி சமையல் செய்த இடம்.



சித்திரகூடத்தில்தான் இருக்க வேண்டும் என்று கூறினார். ஸ்ரீ இராமர் தன்னுடைய பதினான்கு ஆண்டுகால வனவாசத்தில் பன்னிரண்டு ஆண்டுகளை சித்திரகூடத்தில் கழித்தார், பிறகு தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள தண்டகாரண்யத்திற்குச் சென்றார்.

## முனிவர்களுக்கான இடம்

சித்திரகூடம் என்றால் ''மகிழ்ச்சி தரும் ஆஷ்ரமம்'' என்று பொருள்; அந்த இடம் நெடுங்காலமாகவே கடுந்தவங்களைக் கடைபிடிக்க உகந்த இடமாகவே இருந்து வந்துள்ளது. சித்திரகூடம், மலைகளும் காடுகளும் குகைகளும் நிறைந்திருந்ததால், முனிவர்களுக்கும் துறவிகளுக்கும் புகலிடங்களாகப் பயன்பட்டன. இன்றும்கூட இஃது அழகாகவும், ஆன்மீக வாழ்க்கைக்கு உகந்ததாகவும் விளங்குகின்றது. இங்குள்ள காற்று தூய்மையாகவும், புத்துணர்ச்சி அளிப்பதாகவும் உள்ளது.

நாங்கள் அக்டோபர் மாதத் துவக்கத்தில் இங்கு வந்தோம். இரவுகளும் காலை வேளையும், இன்பமூட்டுவதாகவும் குளிர்ச்சியாகவும் இருப்பதுடன், பகல் வேளையில், சிறிது உஷ்ணமாக, ஆனால் தாங்கக்கூடிய அளவில் இருந்தது.

எங்கு பார்த்தாலும் பெரிய மலைகளும், பாடும் பறவைகளாலும் குரங்குகளாலும் சூழப்பட்டக் காடுகளும் இங்கு உள்ளன. பகவான் ஸ்ரீ இராமர் வனவாசம் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருந்தாலும், அவருக்கும் சீதாதேவிக்கும் சித்திரகூடம் ரம்மியமாகவே இருந்தது.

இன்றும் கூட சித்திரகூடம், துறவு வாழ்க்கையைக் கடைபிடிக்கத் தகுந்த சூழல்களுடன் உயர்வாகவே அமைந்துள்ளது. இஃது எந்தவொரு பெரிய நகரத்திலிருந்தும் தொலைவில் தான் உள்ளது. வட இந்தியாவில், உத்திர பிரதேசத்தின் சமவெளிப் பகுதிகளும், மத்திய பிரதேசத்தின் மலைகள், காடுகள், மற்றும் குன்றுகளும் இணையும் இடத்தில் சித்திரகூடம்

அமைந்துள்ளது. தற்போதைய சித்திரகூட நகரத்தின் ஒரு பகுதி உத்திர பிரதேசத்திலும், மற்றொரு பகுதி மத்திய பிரதேசத்திலும் உள்ளன.

உள்ளூர் மக்கள் எளிமையாக, நெறிமுறை தவறாத வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். யாத்திரிகர்கள் தங்குவதற்கான அறைகள் மிகவும் எளிமையாக உள்ளன; உணவும் அதைப் போலவேதான். சித்திரகூடம் பெரிய நகரங்களில் இருந்து வெகு தொலைவில் உள்ளதால், அருகில் விளைவிக்கப்படும் பழங்களும் காய்கறிகளுமே அங்குக் கிடைக்கின்றன.

சித்திரகூடத்தில் பல கோவில்கள் உள்ளன. பெரும்பாலான கோவில்கள், மந்தாகினி கங்கையில் ஸ்ரீ இராமர் குளித்த இராம காட் என்னும் இடத்திலும், காமத-நாதாஜி (ஆசைகளை நிறைவேற்றும் கடவுளின் மலை) என்னும் மலையைச் சுற்றியும் தான் அமைந்துள்ளன. பெரும்பாலானவை சீதா-இராமர் கோவில்கள்; ஆனால் அங்கு இரண்டு நரசிம்மர் கோவில்களும், சில கிருஷ்ணர் கோவில்களும், ஜகந்நாதர், பலதேவர், சுபத்ராதேவிக்கு ஒரு கோவிலும் சில சிவன் கோவில்களும் கூட உள்ளன. சுமார் நூறு வருடங்களுக்கு முன்பாக சித்திரகூடத்தில் பல கட்டிடங்கள் இருந்ததாகத் தெரிகிறது. ஏனெனில், பல



**மேலே:** இராமரை பரதர் சந்தித்து அயோத்திக்குத் திரும்பும்படி கெஞ்சிக் கேட்ட பரத-மிலாப் என்னும் இடம்.



***கீழே:*** அங்குமிங்கும் கவனத்தைச் சிதற விடாமல் ஆழ்ந்த கவனத்துடன் பலமணி நேரமாகத் தொடர்ந்து இராமாயணம் படிக்கும் இராம பக்தை.



**மேலே:** சித்திரகூடத்திலுள்ள ஒரு கோவிலில் மகன்களான லவ, குசவுடன் வீற்றிருக்கும் சீதாதேவியின் விக்ரஹம்

கோவில்கள் அக்காலக் கட்டத்தில் தோன்றியதாகத் தெரிகிறது. பல மாமன்னர்கள் இங்கு கோவில்களைக் கட்டியுள்ளனர்.

பெரும்பாலான கோவில்கள் திருமணமான தம்பதிகளாலும், சிலகோவில்கள்சாதுக்களாலும்கவனித்துக்கொள்ளப்படுகின்றன. விக்ரஹங்களுக்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நன்றாக உள்ளன; மேலும், கோவில்கள், நேர்த்தியான முறையிலும், தூய்மையாகவும் பராமரித்து வரப்படுகின்றன. பெரும்பாலான கோவில்களில் பல்வேறு சாலகிராமங்கள் (கல்லின் உருவிலான விக்ரஹங்கள்) உள்ளன. இந்த சாலகிராமங்கள் நன்கு பராமரிக்கப்படுகின்றனர்; தினமும் புதிய திலகத்துடன் நன்கு காட்சி அளிக்கின்றனர்.

ஜானகி தேவி என்றும் அறியப்படும் சீதாதேவி குளிக்கும் இடமான ஜானகி குண்டத்திலும் சில கோவில்கள் உள்ளன. இங்கு இரண்டு ஜானகி குண்டங்கள்; ஒன்று, குப்த



கோதாவரியிலும், மற்றொன்று ராம காட்டத்தில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

கோவில்கள் இருக்கும் அளவிற்கு சித்திரகூடத்தில் ஆஷ்ரமங்கள் உள்ளன. இரண்டு ஆஷ்ரமங்களில் பகவான் ஸ்ரீ இராமரின் நாம ஜெபம் தொடர்ந்து இடைவிடாமல் இரவு பகலாக நடைபெறுகிறது. ஓர் ஆஷ்ரமத்தில் இந்த ஜெபம் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவும், மற்றொன்றில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் நடைபெற்று வருகின்றது.

இரண்டு ஜானகி குண்டங்களில் ஒன்றில் ஓர் ஆஷ்ரமம் உள்ளது; அங்கு பத்து சாதுக்கள் வசித்து வருகின்றனர். ஒரு நாளைக்கு இருமுறை அங்கு வரும் பார்வையாளர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. நாங்கள் அங்கு சென்ற நாளன்று இருபத்தைந்து சாதுக்களும், நாற்பது யாத்திரிகளும் உணவருந்தினர். ஒரு நாளின் இருபத்தி நான்கு மணி நேரமும் இராமாயண பாராயணம் நடைபெறுவதால், பிரசாதம் எடுத்துக் கொள்ளும் போது, விருந்தாளிகள் பகவானின் லீலைகளைக் கேட்டுக் கொண்டே இருக்க முடிகிறது.

சித்திரகூட வாசியான ஒரு பள்ளி ஆசிரியரை நாங்கள் சந்தித்தோம். அந்த இடத்தின் ஆன்மீகத் தன்மைகளை அவர் வெகுவாகப் புகழ்ந்துரைத்தார். பிறகு மற்றவர்களைப் போலவே அவரும் எங்களிடம் பேசுவதை நிறுத்தி விட்டார்.

அவர் கூறினார், ‘‘தூய்மையாக இருக்கும் பக்தர்கள் இன்றும்கூட சித்திரகூடத்தில் ஸ்ரீ இராமரைக் காண முடியும்; ஸ்ரீ இராமர் நடக்கிறார், ஸ்ரீ இராமர் குளிக்கின்றார், கீழே குனிந்து நதியில் ஸ்ரீ இராமர் நீர் அருந்துகிறார்.’’ ஆமாம்! நிச்சயம். தூய்மையாக இருப்பவர்கள் இப்போதும் சித்திரகூடத்தில் ஸ்ரீ இராமரைக் காணலாம்.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)





**மேலே:** இராமாயணத்தின் ஆசிரியர் ஸ்ரீ வால்மீகி
**அதற்கும் மேலே:** குப்த கோதாவரி நதி தோன்றும் இடத்திற்கு அருகில் நடந்துவரும் ஆசிரியர்
**வலது:** காமத நாதாஜி குன்றிலுள்ள சீதா ராம லக்ஷ்மண விக்ரஹங்கள்



# இராமாயணக் கேள்வி பதில்கள்

வழங்கியவர்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்

இராமாயணம்—பாரத தேசத்தின் பொற்காவியம். பன்னெடுங் காலத்திற்கு முன்பு முழுமுதற் கடவுளான ஸ்ரீ இராமர் இப்புண்ணிய பூமியில் வாழ்ந்தபோது, அவரது செயல்களை, மக்கள் எக்காலத்திற்கும் நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்காக மாமுனிவர் வால்மீகி, இராமாயணம் என்னும் இதிகாசத்தின் வடிவில் தொகுத்தார். இராம லீலைகள் இப்பூமியில் நடைபெற்று இலட்சக்கணக்கான வருடங்களாகியும், இன்று வரை இராமாயணம் பராமரிக்கப்பட்டு வருகிறது. பாரத தேசத்தின் பண்பாட்டில் இராமாயணத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. பாரதத்தின் பல்வேறு மொழிகளில் இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அல்லது வால்மீகி எழுதியதை அடிப்படையாகக் கொண்டும் மற்ற சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டும் முழுமையாகவே இதர மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. தமிழில் கம்பர் இயற்றிய இராமாயணம் அனைவரும் அறிந்ததே.

இருப்பினும், கலி யுகத்தின் தாக்கத்தினாலும், இராமாயணத்தை விளக்குவதற்குத் தகுதிவாய்ந்த ஆச்சாரியர்கள் இல்லாத காரணத்தினாலும், மக்களின் மூடத்தனத்தினாலும், நாத்திகர்களின் அர்த்தமற்ற வாதங்களினாலும், அத்தகு சீர்மிகு இராமாயணத்தின் பொலிவு தற்சமயத்தில் மறைக்கப்பட்டுள்ளது போன்று தோன்றுகின்றது. இராமர் கோவிலுக்குச் செல்பவர்கள் கூட, இராமாயணம் உண்மையில் நடந்த நிகழ்ச்சியா, அல்லது எழுதப்பட்ட கதையா என்று கேட்பது மிகவும் வருத்தம் தரும் உண்மை. இராமாயணத்தின் மீது மக்களுக்கு இருக்கும் சில குறிப்பிட்ட சந்தேகங்களைப் போக்குவதற்கான ஓர் எளிய முயற்சியே இக்கட்டுரை.

### சந்தேகம் ஏன்?

ஆங்கிலேயர்களும் இதர ஐரோப்பியர்களும் பாரத தேசத்தைக் கையகப்படுத்துவதற்கு முன்பு, பாரதத்தின் சீர்மிகு பண்பாட்டினைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அப்பண்பாட்டின் அடிப்படை வேத சாஸ்திரங்களே என்பதை உணர்ந்த காரணத்தினால், வேத சாஸ்திரங்களின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை சிதைக்காதவரை அவர்களை அடிமைப்படுத்த முடியாது என்பதையும் அறிந்தனர். அந் நம்பிக்கையைக் குலைக்கும் வண்ணம் வேத சாஸ்திரங்கள் குறித்து பல்வேறு கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டனர்; வேத சாஸ்திரங்கள் மனிதனால் எழுதப்பட்டவை என்றும், அவற்றில் பல்வேறு தவறுகள் இருப்பதாகவும் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். தொடக்கத்தில், அவர்களது கூற்றுகள் முக்கியத்துவம் பெறவில்லை; ஆயினும் காலப்போக்கில் மக்கள் மனதில் அவர்களது தீய பிரச்சாரங்கள் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திவிட்டன. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரும் ஆங்கிலேயர்களின் கருத்துக்களிலிருந்து நாம் இன்னும் சுதந்திரம் பெறவில்லை. உண்மையில் சொல்லப்போனால், சுதந்திரம் பெற்ற பின்னர், நம் நாடு பண்பாட்டில் மேலும் பின்நோக்கித்தான் சென்று கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாதது. இராமாயணம் என்பது இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்பு நடந்த ஓர் உண்மை வரலாறு, அதில் சந்தேகம் கொள்வது கூடாது.

இராமாயணம் குறித்த அனைத்து கேள்விகளுக்கும் விடையளிப்பது என்பது இச்சிறிய கட்டுரையில் சாத்தியமல்ல என்பதால், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு மட்டும் இங்கு விடையளிக்கப்படுகின்றன. இங்கு விளக்கப்படும் கேள்விகள் அனைத்தும் இராமாயணத்தைப் பற்றி ஓரளவு அறிந்தவர்களால் கேட்கப்படும் கேள்விகள். இராமாயணத்திலிருந்து ஒருவர் கேள்வி கேட்டால், அவர் இராமாயணத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று பொருள். அவர் இராமாயணத்தை முற்றிலுமாக ஏற்காவிடில், அதிலிருந்து கேள்வி கேட்பதில் அர்த்தமில்லை. உதாரணமாக, நமது முதல் கேள்வி, “வாலியை

மறைந்து நின்று கொன்றது தர்மமா?'' என்பது. இக்கேள்வியைக் கேட்பவர் இராமாயணத்தை ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது நிச்சயம். இராமாயணத்தை அவர் நம்பவில்லையெனில், அவரது கேள்வியில் எந்த அர்த்தமும் இல்லை. இராமாயணத்தை நம்பாதவருக்கு இராமரும் கிடையாது, வாலியும் கிடையாது; அப்படியிருக்கையில் வாலியைக் கொன்றது மட்டும் எப்படி வந்தது? அத்தகு யதார்த்தமற்ற குதர்க்கமான வாதங்களை விட்டுவிட்டு தெளிந்த மனதுடன் எமது பதில்களை அறிந்துகொள்ளுங்கள்.

## வாலியை மறைந்து நின்று கொன்றது தர்மமா?

அது தர்மமா அதர்மமா என்று நாம் விவாதிப்பதற்கு முன்பு, தன்னை மறைந்து நின்று கொன்றது தர்மமா என்று வாலியே கேட்ட கேள்விக்கு பகவான் ஸ்ரீ இராமரே பின் வருமாறு வாலியிடம் விடையளித்துள்ளார்: ''இந்த முழு உலகமும் இக்ஷ்வாகு வம்ச மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. அம்மன்னர்களுக்குத் தங்களது பிரஜைகளிடமும் மிருகங்களிடமும் பூரண அதிகாரம் உண்டு. காமத்தினாலும் பேராசையினாலும் பாவகரமாகச் செயல்பட்டவன் நீயே. சுக்ரீவனின் மனைவியை அபகரித்த பாவத்திற்கு நீ என் கைகளால் மரணமடைய வேண்டியவன். மகள், மருமகள், சகோதரி, அல்லது



தம்பியின் மனைவியுடன் உடலுறவு கொள்பவனுக்கு மரணமே உகந்த தண்டனை. ஒரு மன்னன் பாவியை தண்டிக்கத் தவறினால், அவனும் பாவியாகி விடுகிறான். இதன் காரணத்தினால்தான் உன்னைக் கொல்வதாக நான் சுக்ரீவனுக்கு உறுதியளித்தேன். அதுமட்டுமின்றி, சத்திரியர்கள் மிருகங்களை வேட்டையாடும்போது மறைந்துநின்று வேட்டையாடுவது வழக்கம். நீ ஒரு குரங்கு என்பதால் என்னுடைய செயலில் எந்த வொரு குற்றமும் இல்லை.'' இராமரின் இவ்விளக்கத்தை வாலி முற்றிலுமாக ஏற்று மன்னிப்பை வேண்டினான்.

இராமரால் கொல்லப்பட்ட வாலியே அச்செயல் தர்மம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு சந்தேகத்திற்கு இடமுண்டோ! அச்செயல் தர்மத்திற்கு விரோதமானதாக இருந்திருந்தால் வாலியின் மகன் அங்கதன் இராமருக்காகப் போரில் ஈடு பட்டிருப்பாரா? சிந்தியுங்கள்!

அதுமட்டுமின்றி, ஸ்ரீ இராமர் முழுமுதற் கடவுள் என்பதால், அவரால் கொல்லப்படுவதும் மிகச்சிறந்த நன்மையை நல்கக்கூடியதாகும்.

## சீதையைத் தீக்குளிக்கச் சொன்னது சரியா?

மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்னும் பண்பாட்டை அறிந்தவர்கள் இதனை ஏற்றுக்கொள்வர். ஒரு பெண் தனது கணவனிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறொரு ஆணுடன் ஒருநாள் இருந்தால்கூட அது மாபெரும் குற்றமாகும். சமுதாயம் முறையான கற்புள்ள பெண்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அவர்களின் கற்பு மிகவும் வலியுறுத்தப்படுகிறது. அத்தகு சமுதாயத்தின் மத்தியில் இராமரால் எவ்வாறு சீதையை ஏற்றுக்கொள்ள முடியும்? சீதையின் மீது இராமருக்குத் துளியளவும் சந்தேகம் கிடையாது, ஆனால் அவதூறு பேசும் மக்களின் வாயை அடைப்பதற்காகவும் சீதையின் உயர்ந்த கற்பை அனைவருக்கும் உணர்த்துவதற்காகவும் மட்டுமே இராமர் சீதையைத் தீயில் இறங்கச் சொன்னார். சீதையைத் தீயில் இறங்க வேண்டாம் என்று இராமர் ஒருவேளை தடுத்திருந்தால், அவர் சீதையை காமத்தினால் ஏற்றுக் கொண்டார் என்று மக்கள் குற்றம் சாட்டியிருப்பர். மேலும், இந்நிகழ்ச்சியின் மூலம் சீதையின் புகழ் மூவுலகிலும் நிரந்தரமாக இடம் பெற்றுவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது மட்டுமின்றி, கூர்ம புராணத்திலிருந்து நாம் அறிவது என்னவெனில், இராவணனால் கடத்திச் செல்லப்பட்ட சீதை உண்மையான சீதை அல்ல, மாயா சீதை. உண்மையான சீதையை இராவணனைப் போன்ற அசுரர்களால் தொட முடியுமா என்ன! உண்மையான சீதை அக்னி தேவரின் பாதுகாப்பில் இருக்க, இராவணன் மாயா சீதையை மட்டுமே இலங்கைக்கு எடுத்துச் சென்றான். அந்த மாயா சீதையை ஏற்றுக்கொள்ள விரும்பாத இராமர், அவளை நெருப்பில் இறங்கச் செய்தார்; அக்னி தேவர் உண்மையான சீதையினை இராமரிடம் திருப்பியளித்தார்.




## சீதையைக் காட்டிற்கு அனுப்பி வைக்கும் அளவிற்கு இராமருக்கு கல் நெஞ்சமா?

முழுமுதற் கடவுளான ஸ்ரீ இராமர் கருணையே வடிவானவர், அவர் கல் நெஞ்சத்துடன் செயல்பட்டார் என்று நினைத்தல் மாபெரும் குற்றம்.

தன்னுடைய தர்ம பத்தினியான சீதையிடம் ஸ்ரீ இராமர் கடுமையாகவும் கொடுமையாகவும் நடந்து கொண்டதுபோலத் தோன்றுகின்றது. இருப்பினும், ஒரு சிறப்பான மன்னர் என்ற முறையில், தனது வம்சத்தின் மரியாதையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் வருங்காலத் தலைமுறையினருக்கு ஒரு நல்ல உதாரணம் அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் ஸ்ரீ இராமருக்கு இருந்தன. ஸ்ரீ இராமர் சீதையைக் காட்டிற்கு அனுப்பியிருக்காவிடில், அவருக்குப் பின் வந்த மன்னர்கள், தங்களது குடிமக்களின் நிந்தனைகளுக்கு மதிப்பு கொடுக்கத் தவறிவிடுவர். அதையே காரணமாகக் காட்டிவிடுவர். இராமரின் முடிவு கடுமையாகத் தோன்றலாம், ஆனால் மக்களை ஆட்சி செய்ய வேண்டிய மன்னர் சில நேரங்களில் கடுமையாக இருத்தல் அவசியம். மன்னரின் முதல் கடமை மக்களை ஆட்சி செய்வதே; மற்றவை அனைத்தும் இரண்டாம் நிலையே, அது தனது சொந்த மகிழ்ச்சியை அல்லது குடும்பத்தாரின் மகிழ்ச்சியைச் சிதைப்பதாக இருந்தாலும்.

சீதையைக் காட்டிற்கு அனுப்பிய இராமரின் முடிவு, ஒரு சாதாரண சலவைத் தொழிலாளியின் பேச்சை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்று பெரும்பாலான மக்கள் நம்பி வருகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. உத்தரகாண்டத்தின் 43ஆவது ஸர்கத்தில் ஸ்ரீ இராமர் தனது சகாக்களில் ஒருவரான பத்ரனிடம் தன்னைப் பற்றியும் தன்னுடைய குடும்பத்தினரைப் பற்றியும் மக்கள் என்ன நினைக்கின்றனர் என்று வினவுகிறார். இராவணனுக்கு எதிரான ஸ்ரீ இராமரின் வெற்றியைப் பற்றி மக்கள் பேசுவதாக பத்ரன் பதிலளிக்க, அவன் ஏதோ விஷயத்தை மறைப்பதை உணர்ந்த இராமர், எதையும் மறைக்காமல் உரைக்குமாறு வேண்டினார். மக்களுடைய பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்த பத்ரன், இறுதியில் சீதையைப் பற்றி கூறினான்: “இலங்கையில் இராவணனின் கட்டுப்பாட்டில் இருந்த சீதையை எவ்வாறு




ஸ்ரீ இராமர் ஏற்றுக் கொண்டார்? நாமும் நமது மனைவியரை இவ்வாறு விட்டுக் கொடுத்து வாழலாமே. மன்னரைப் பின்பற்றுவது பிரஜைகளான நமது கடமையன்றோ.”

இதைக் கேட்ட ஸ்ரீ இராமரின் இதயம் வெடித்தது. அஃது உண்மையா என்று சபையில் இருந்த இதர ஆலோசகர்களிடம் அவர் வினவ, தங்களது ஆசனங்களிலிருந்து இறங்கி மண்டியிட்ட வண்ணம் தலைகுனிந்த நிலையில் அச்செய்தி உண்மையே என்று அவர்கள் ஒப்புக் கொண்டனர். கனத்த இதயத்துடன் சபையை விட்டு உடனடியாக வெளியேறிய ஸ்ரீ இராமர் நீண்ட யோசனைக்குப் பின் இலட்சுமணன், பரதன், சத்ருகன் ஆகியோரை அழைத்து கண்களில் கண்ணீர் மல்க தனது முடிவை வெளிப்படுத்தினார். அக்னி, வாயு, சூரியன், சந்திரன் என பல்வேறு தேவர்கள் சீதையின் புனிதத்தன்மையை ஏற்றுக்கொண்டபோதிலும், மக்கள் ஏற்காமல் இருப்பதைக் கண்டு அவர் பெருத்த ஆச்சரியமடைந்தார். இருப்பினும், “மன்னன் மீதுள்ள குற்றங்களின் காரணத்தினால் (போலியானதாக இருந்தாலும்), மக்கள் தங்களது தர்மத்திலிருந்து விலகுவார்களேயானால், அதைவிட துக்கம் தரக்கூடியது எனக்கு எதுவும் இல்லை. சீதையின் பிரிவைக் காட்டிலும் அது துக்கம் தரக்கூடியது,” என்று அவர் அறிவித்தார். வேத காலத்தில் அரசாட்சி புரிந்த மன்னர்களின் உயர்நிலையை இது காட்டுகின்றது.

## மிதக்கும் கற்களைக் கொண்டு பாலம் அமைப்பது சாத்தியமா?

சாதாரண மனிதர்களால் சாத்தியமில்லாத செயல்களை செய்யக்கூடியவரே கடவுள். கடவுள் என்பவர் எல்லா சக்திகளும் பொருந்தியவர், அனைத்தும் அறிந்தவர். கற்களை நீரில் மூழ்கச் செய்பவரால் அவற்றை மிதக்கச் செய்ய முடியாதா என்ன! கடவுள் கட்டளையிடும்போது புவிஈர்ப்பு விசையின் விதிகள் மாறிவிடும். தான் ஏற்படுத்திய இயற்பியல் விதியை தனது தேவைக்கேற்ப எவ்வாறு உபயோகிப்பது என்பது அவருக்குத் தெரியும். அதற்காக அவர் யாரிடமிருந்தும் கல்வி கற்க வேண்டிய அவசியம் இல்லை. ஏதேனும் ஓர் அறிவினை வேறு யாரிடமிருந்தாவது கடவுள் அறிந்து கொள்ள வேண்டும் என்றால், அவர் கடவுளாக இருக்க முடியாது. கடவுளின் சக்தியினால் பல கோடி டன்கள் எடையுள்ள அண்ட சராசரங்கள் அனைத்தும் காற்றில் மிதக்கும்போது, பாறைகள் நீரில் மிதப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. கடவுள் விரும்பினால் ஒரு பொருள் மிதக்கும், அதே போன்று அவரது விருப்பத்தினால் வேறு பொருள் மூழ்கும். நம்மால் முடியாது என்பதால் கடவுளாலும் முடியாது என்று சொல்வது குழந்தைத்தனமாகும்.



## இராமேஸ்வரத்தில் சிவலிங்கத்தை வழிபட்ட இராமர், எவ்வாறு முழுமுதற் கடவுளாகக் கருதப்பட முடியும்?




வைஷ்ணவர்களில் சிறந்தவரான சிவபெருமான் ஸ்ரீ இராமரின் திருநாமத்தை சொல்வதில் பேரானந்தம் அடையக்கூடியவர். ஸ்ரீ இராமர் முழுமுதற் கடவுள் என்பதிலும் சிவபெருமான் அவரது மிகச்சிறந்த பக்தர் என்பதிலும் துளியும் சந்தேகம் தேவையில்லை. ஸ்ரீ இராமர் தனது பக்தனான சிவபெருமானை வழிபட்டார்; இதை வைத்து சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற முடிவிற்கு வருவதில் அர்த்தமில்லை. பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரங்களை வைத்து மட்டுமே முழுமுதற் கடவுளை அறிய முடியும்.

அன்னை யசோதை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் காதுகளை சில சமயத்தில் திருவுகிறாள், குச்சியைக் காட்டி மிரட்டுகிறாள்; தந்தை நந்தரோ தனது பாதுகைகளை எடுத்துவரும்படி கிருஷ்ணரிடம் கட்டளையிடுகிறார். இவையெல்லாம் எப்படி சாத்தியம்? அன்னை யசோதையும் நந்தரும் கிருஷ்ணரைக் காட்டிலும் உயர்ந்தவர்களா? இல்லை. கிருஷ்ணர் தனது பக்தர்களுடன் நெருங்கிய உறவுமுறையை விரும்புவதால் இத்தகு லீலைகள் நடைபெறுகின்றன. அதுபோல, இராமராக அவதரித்தபோது தனது பக்தனான சிவபெருமானை அவர் வழிபட்டார். தந்தை சில சமயங்களில் தனது மகனை முதுகில் சுமப்பதால், மகன் தந்தையைக் காட்டிலும் உயர்ந்தவனல்ல; இஃது அவர்களின் அன்புப் பரிமாற்றத்தைக் காட்டும் செயல்.

மேலும், ஸ்ரீ இராமர் சிவபெருமானை வழிபட்ட நிகழ்ச்சி, மூல இராமாயணமான வால்மீகி இராமாயணத்தில் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## உருளைக்கிழங்கை வெட்டுதல் ஆட்டைக் கொல்வதைக் காட்டிலும் பாவமா?



எனக்குத் தெரிந்த சில நபர்கள் உருளைக்கிழங்கை வெட்டுவதும் ஆட்டை வெட்டுவதும் ஒன்றே என்று வாதம் செய்கின்றனர். கொல்லப்படும் ஆட்டினால் குறைந்தபட்சம் கதற முடியும். ஆனால் உருளைக்கிழங்கு, கேரட் போன்ற உயிரினங்களால் கதறக்கூட முடியாது. அவை அப்பாவி உயிரினங்கள். அப்பாவியைக் கொல்வது மற்றவர்களைக் கொல்வதைக் காட்டிலும் பாவம். எனவே, ஆட்டைக் கொல்வதைக் காட்டிலும் உருளைக்கிழங்கை கொல்லுதல் மிகவும் பாவம் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களிடம் எவ்வாறு பதிலளிப்பது?
(விஜய் ஆனந்த், பெங்களூர்)



### எமது பதில்

சற்றும் பொருந்தாத உதாரணம், அர்த்தமற்ற வாதம். கதற இயலாத உருளைக்கிழங்கைக் கொல்வது கதறக்கூடிய ஆட்டைக் கொல்வதைக் காட்டிலும் பாவகரமானது என்று எடுத்துக் கொண்டால், ஆட்டைக் காட்டிலும் அதிகளவில் கதறக்கூடிய மனிதனைக் கொல்வது ஏறக்குறைய பாவமே இல்லாத செயல் என்று முடிவு செய்யலாமே. அவர்களின் வாதத்தின்படி, உருளைக்கிழங்கைக் கொல்வதைக் காட்டிலும் மனிதர்களைக் கொல்வது சிறந்தது. எனவே, உருளைக்கிழங்கு சாப்பிடுவதை நிறுத்திவிட்டு மனிதனை சாப்பிடத் தொடங்கலாமே. என்னே அபத்தம்! முற்றிலும் முட்டாள்தனமான இத்தகு வாதங்கள் எந்தவித அடிப்படையும் இன்றி, மேலோட்டமான புத்திசாலித்தனத்துடன் சிலரால் முன்னுரைக்கப்படலாம். பகுத்தறிவுடைய மனிதர்கள் அத்தகு வாதங்கள் வெறுமனே மக்களைக் குழப்புவதற்காகவே என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.





தினமும் சொல்வீர்!

# ஹரே கிருஷ்ண
# ஹரே கிருஷ்ண
# கிருஷ்ண கிருஷ்ண
# ஹரே ஹரே
# ஹரே ராம
# ஹரே ராம
# ராம ராம
# ஹரே ஹரே

மகிழ்ச்சியடைவீர்!

---




பாவை கல்லூரியில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவ மாணவிகள்




சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட KSR கல்லூரி மாணவர்கள்

**சேலம்:** தன்னையறியும் விஞ்ஞானம் என்ற பெயரில் இஸ்கான் சேலம் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கென சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. விஞ்ஞானப்பூர்வமான முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் நடத்தப்படும் இவ்வகுப்புகளில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா சமீபத்தில் சேலம் இஸ்கான் கோவிலில் நடைபெற்றது. KSR, பாவை, மஹா, மஹேந்திரா ஆகிய கல்லூரிகள் உட்பட இதர கல்வி நிறுவனங்களிலும் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்குகொள்ளும் மாணவர்கள் உயர்ந்த அறிவையும் ஆனந்தத்தையும் உணர்ந்து வருகின்றனர்.




**சிற்றறிவுடையோருக்கும் முட்டாள்களுக்கும் நான் ஒருபோதும் தோன்றுவதில்லை. நான் எனது அந்தரங்க சக்தியால் மறைக்கப்பட்டுள்ளதால், நான் பிறப்பற்றவன், அழிவற்றவன் என்பதை இவர்கள் அறிவதில்லை.**

**—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (பகவத் கீதை 7.25)**




**கருத்து:** தனது சொந்த கருத்துகள்தான் சிறந்தவை என்று கூறிக்கொள்ளும் கல்வியறிவு பெற்ற அறிஞர்களும் விஞ்ஞானிகளும் இந்த பௌதிக உலகில் அதிகளவில் இருக்கின்றனர். தங்களது சொந்தக் கொள்கைகளை நிரூபிக்க இயலாத அவர்கள், பக்தித் தொண்டை மற்ற தொண்டுகளுடன் ஒப்பிட முயற்சி செய்வர். எல்லாம் தெரிந்தவன்போல காட்டிக்கொள்ளும் இக்கிணற்றுத் தவளைகளுக்கு பக்தித் தொண்டைப் பற்றி எதுவும் தெரியாது.




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் மூன்று அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **நான்காம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# உன்னத அறிவு

## மூன்றாம் அத்தியாயத்தின் சுருக்கம்

கடமையைச் செய்வதா, துறப்பதா, இரண்டில் எது சிறந்தது என்னும் அர்ஜுனனின் கேள்வியுடன் தொடங்கிய மூன்றாம் அத்தியாயத்தில், கர்ம யோகத்தின் தன்மைகள் குறித்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் விளக்கமளித்தார். செயல்படுதல் என்பது அனைவருக்கும் கட்டாயமான ஒன்று, அச்செயல்கள் விஷ்ணுவின் திருப்திக்காகச் செய்யப் படும்போது அவை பந்தத்திலிருந்து விடுவிக்கக்கூடியவை. தன்னை யுணர்ந்த நபருக்குக் கடமைகள் இல்லை, இருப்பினும் மக்களை வழிநடத்து வதற்காகஅவர்கள்தங்களதுகடமைகளில் ஈடுபடுகின்றனர். சில நேரங்களில் பலவந்தமாக பாவச் செயல்களில் ஒருவர் ஈடுபடுவதற்கு காரணம் என்ன என்று அர்ஜுனன் வினவ, உயிர்வாழிகளின் நித்திய எதிரியான காமமே அதற்குக் காரணம் என்று கிருஷ்ணர் பதிலளித்தார். காமத்தின் பல்வேறு தன்மைகளையும் நிலைகளையும் விளக்கியபின்னர், காமத்தை தெய்வீக ஞானத்தினால் வெல்லு மாறு அர்ஜுனனை அறிவுறுத்தினார்.

## மூன்றாம் அத்தியாயத்திற்கும் நான்காம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

மூன்றாம் அத்தியாயத்தின் இறுதியில் காமத்தை தெய்வீக ஞானத்தின் (உன்னத அறிவின்) மூலமாக வெற்றிகொள்ள வேண்டும் என்று கிருஷ்ணர் அறிவுறுத்தினார். உன்னத அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பின்னர், அந்த உன்னத அறிவு எவ்வாறு பெறப்படுகின்றது என்ற விளக்கத்துடன் அடுத்த அத்தியாயத்தை தொடங்குகிறார்.

## சீடப் பரம்பரையில் பெறப்பட வேண்டும்

அழிவற்ற இந்த உன்னத விஞ்ஞானம் பன்னெடுங் காலத்திற்கு முன்பே சூரியதேவனான விவஸ்வானுக்கு உபதேசிக்கப்பட்டது. விவஸ்வான் அதனை மனித குலத் தந்தையான மனுவிற்கும், மனு, இக்ஷ்வாகு மன்னனுக்கும் முறையே உபதேசித்தனர். இவ்வாறு சீடப் பரம்பரை மூலமாகப் பெறப்பட்டு புனிதமான மன்னர்களால் உணரப்பட்டு வந்தது. காலப்போக்கில் அத்தொடர் விட்டுப்போகவே மீண்டும் அந்த தெய்வீக ஞானத்தை, தனது பக்தனாகவும் நண்பனாகவும் இருக்கும் காரணத்தினால், அர்ஜுனனுக்கு எடுத்துரைப்பதாக கிருஷ்ணர் கூறுகிறார். பகவத் கீதை என்னும் உன்னத ஞானம் முறையான குரு சீடப் பரம்பரையிலிருந்து பெறப்பட வேண்டும் என்னும் முக்கிய தகவலை நாம் இதிலிருந்து அறிகிறோம்.

கீதையை உண்மையில் புரிந்துகொள்ள விரும்பினால், அர்ஜுனனின் வழியைப் பின்பற்றி, ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தனாகவும் நண்பராகவும் நாம் மாற வேண்டும்.

## அர்ஜுனனின் கேள்வி

சூரியதேவன் பிறப்பால் கிருஷ்ணரை விடப் பெரியவர். பன்னெடுங் காலத்திற்கு முன்பே அவருக்கு கீதா உபதேசம் செய்யப்பட்டதை எவ்வாறு புரிந்துகொள்வது என்று அர்ஜுனன் கேள்வி எழுப்புகிறான். முழுமுதற் கடவுளான கிருஷ்ணர் காலத்திற்கு அப்பாற்பட்டவர். அர்ஜுனனைப் போன்ற பக்தர்களிடையே இதுகுறித்து எந்தவித ஐயமும் கிடையாது. கிருஷ்ணரை சாதாரண மனிதனாகக் கருதும் நாத்திகர் களின் மனப்பான்மையை முறியடிப்பதற் காகச் செய்யப்பட்ட முயற்சியே அர்ஜுன னால் பகவானின் முன்பு எழுப்பப்பட்ட இக்கேள்வியாகும்.

## கிருஷ்ணரைப் பற்றிய திவ்ய ஞானம்

தான் பல்வேறு அவதாரங்களை எடுத்திருப்பதாகவும், தன்னால் அவற்றை நினைவுகொள்ள முடியும் என்றும் ஸ்ரீ கிருஷ்ணர் பதிலளித்தார். அவர் பிறப்பற்றவராக இருந்தாலும், அவரது உடல் அழிவற்றதாக இருந்தாலும், உயிர்வாழிகள் அனைவருக்கும் அவரே இறைவனாக இருந்தாலும், அவர் தமது அந்தரங்க சக்தியால் தனது சுய உருவில் தோன்றுகிறார். ஒரு சாதாரண ஜீவாத்மா பிறந்து வளர்வதைப் போலவே கிருஷ்ணரும் பிறந்து வளர்வதாகத் தோன்றினாலும், அவர் இளமையைத் தாண்டிச் செல்வதில்லை. உண்மையில் அவரது தோற்றமும் மறைவும் சூரியன் உதித்து நம் கண்முன் சில மணிநேரம் காட்சியளித்து பின்பு மறைவதைப் போன்றதே. அவர் அவ்வாறு தோன்றுவதற்கான காரணம் என்ன?

எப்போதெல்லாம் எங்கெல்லாம் தர்மம் சீர்குலைந்து அதர்மம் ஆதிக்கம் செலுத்துகின்றதோ, அப்போதெல்லாம் தோன்றும் அவர், பக்தர்களைக் காத்து துஷ்டர்களை அழித்து மீண்டும் தர்மத்தை நிலைநாட்டுகிறார். அன்புமிக்க தன்னுடைய பக்தர்களுக்குத் தனது லீலைகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதே அக்காரணங்களில் முக்கிய மானதாகும். அவரால் அரங்கேற்றப்படும் லீலைகளும் அவரது பிறப்பும் முற்றிலும் தெய்வீகமானவை. பௌதிக இயற்கையின் தன்மை இவற்றில் துளியும் கிடையாது. இதனை தத்துவப்பூர்வமாக அறிந்துகொள்பவர்கள், தங்களது உடலை மாய்த்த பின்னர், கிருஷ்ணரின் நித்தியமான உலகிற்குச் செல்ல முடியும். அங்குச் சென்றோர் மீண்டும் இப்பௌதிக உலகில் பிறவியெடுப்பதில்லை. அந்த நிலையை அடைய விரும்புவோர், கிருஷ்ணரிடம் சரணடைந்து அவரில் லயித்து, பற்றுதல், பயம், கோபம் ஆகியவற்றை விட்டொழிக்க வேண்டும்.

## தெய்வீக ஞானத்தை நடைமுறைப்படுத்துதல்

கிருஷ்ணரிடம் முற்றிலும் சரணடையாமல் இதர ஆசைகளை வைத்திருப்போர், சரணடைவதற்கு ஏற்ற பலனை அடைவர். தன்னை வழிபடுவோரிடம் இருக்கும் பௌதிக ஆசைகளை கிருஷ்ணர் தூய்மைப் படுத்துவதால், விரும்பும் பலனை அடைவதற்கு கால தாமதம் ஆகும். இதன் காரணத் தினால், இதர ஆசையுடைய அத்தகுநபர்கள் பெரும் பாலும் தேவர்களை வழிபடுவர், தேவ வழிபாட்டினால் அவர்கள் எதிர்பார்க்கும் பலன்கள் விரைவிலேயே கிட்டும். பௌதிகப் படைப்பிற்கு அப்பாற்பட்ட முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை வழிபடாமல், தற்காலிகமான பௌதிகச் செல்வங்களுக்காக தேவர்களை வழிபடும் முட்டாள்கள் கிருஷ்ண உணர்வில் ஆர்வம் காட்டுவதில்லை. அனைத்துப் பலன் களையும் இறுதியில் வழங்குபவர் கிருஷ்ணரே என்பதால், மக்களின் இன்ப துன்பங்களுக்கு அவர் பொறுப்பாளி ஆகின்றாரா?

இல்லை. ஜீவன்கள் ஒவ்வொருவரும் ஜட இயற்கையின் குணங்களால் ஆளப்படுகின்றனர். அந்த குணத்திற்கும் அவர்கள் செய்யும் தொழிலுக்கும் ஏற்ப மனித சமுதாயம் நான்கு வித வர்ணங்களாக (பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் சமூக அமைப்புகளாக) பிரிக்கப்படுகின்றது. பகவத் கீதை ஜாதியை வளர்ப்பதாக சிலர் குற்றஞ்சாட்டுவதுண்டு; ஆனால் கீதையில் கூறப்பட்டுள்ள பிரிவுகள் பிறப்பின் அடிப்படையில் உள்ள தற்போதைய ஜாதிகளைப் போன்றவை அல்ல என்பதை கவனித்தல் அவசியம்.



பகவத் கீதையின் ஞானம் பன்னெடுங் காலத்திற்கு முன்பே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் சூரிய தேவனான விவஸ்வானுக்கு உபதேசிக்கப்பட்டது. விவஸ்வான் அதனை மனுவிற்கு வழங்க, அவ்வாறே சீடப் பரம்பரை மூலமாகப் பெறப்பட்டு வந்தது.

வர்ணாஷ்ரம முறையை ஏற்படுத்தியவர் கிருஷ்ணரே என்றபோதிலும், அவர் வர்ணாஷ்ரமத்திற்கு அப்பாற்பட்டவர். அவரை பாதிக்கும் செயல் ஏதுமில்லை; இதனை அறிபவன் செயல்களின் பாதிப்பிலிருந்து விடுபட முடியும். முற்காலத்தில், முக்தி பெற்ற ஆத்மாக்கள், கிருஷ்ணரின் இந்த உன்னத தன்மையை உணர்ந்து செயல்பட்டனர். அவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றி மற்றவர்களும் செயல்பட வேண்டும்.

## கர்மத்தை ஞானத்தின் தளத்திலிருந்து புரிந்துகொள்ளுதல்

போர்க்களத்தை விட்டு வெளியேறி செயலற்ற நிலைக்குச் செல்ல விரும்பிய அர்ஜுனனிடம், *கர்மம்* (செயல்) எவ்வாறு *அகர்மமாக* (செயலற்ற நிலையாக) காணப்பட முடியும் என்பதை ஸ்ரீ கிருஷ்ணர் விளக்குகிறார். *கர்மம்* (செயல்), *விகர்மம்* (தடை செய்யப்பட்ட செயல்), *அகர்மம்* (செயலற்ற நிலை) ஆகியவற்றின் நுணுக்கங்களை அறிவது கடினம், அறிவுள்ள நபர்களும் இதில் குழம்புவதுண்டு. *கர்மம்* என்பது வேதங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ள செயல்களைக் குறிக்கும், பௌதிக ஆசைகளுடன் செய்யப்படும் அச்செயல்கள் நற்பலன்களைக் கொடுப்பவை. *விகர்மம்* என்பது வேதங்களில் தடைசெய்யப்பட்டுள்ள செயல்களைக் குறிக்கும், அவை பாவ விளைவுகளைக் கொடுப்பவை. *அகர்மம்* என்றால் செயலற்ற நிலை என்று பொருள், செயலற்ற நிலையில் எந்தவொரு நல்ல தீய விளைவுகளும் ஏற்படுவதில்லை; இது கிருஷ்ணரின் திருப்திக்காகச் செய்யப்படும் செயல்களைக் குறிக்கின்றது. அகர்மத்தில் கர்மத்தையும் கர்மத்தில் அகர்மத்தையும் காண்பவன் அறிவாளி.

*கர்மத்தில் அகர்மம்* என்பது பக்தித் தொண்டைக் குறிக்கும்; பக்தித் தொண்டில் ஈடுபடும் பக்தன், கர்மத்தில் ஈடுபடுவதுபோலத் தோன்றினாலும், அச்செயல் எந்தவொரு பௌதிக விளைவுகளையும் ஏற்படுத்தாத காரணத்தில், *அகர்மம்* (செயலற்ற நிலை) என்று அழைக்கப்படுகிறது. *அகர்மத்தில் கர்மம்* என்பது அதற்கு எதிர்மறையானதாகும். கிருஷ்ணரைப் பற்றிய திவ்ய ஞானம் இல்லாததால், அகர்மத்தை பயிற்சி செய்வதாக எண்ணி செயல்களைச் செய்ய மறுத்து வாழும் ஞானிகளுக்கு இது பொருந்தக் கூடியதாகும். அத்தகு ஞானிகள், செயலற்ற நிலையில் இருக்க விரும்பினாலும், சுவாசித்தல், உண்ணுதல், நடத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுத்தான் ஆக வேண்டும். ஆத்மாவின் செயல்படும் தன்மை தவிர்க்க இயலாததாகும். செயல்களைத் தவிர்ப்பதற்கான செயற்கையான முயற்சிகள் அபாயத்தில் முடியும். களங்கமுற்ற மனமும் ஈடுபாடுகள் அற்ற புலன்களும் வீழ்ச்சிக்கு வழிவகுப்பவை.

புலனின்பத்திற்கான முயற்சிகளை விட்டொழித்து கிருஷ்ணரைப் பற்றிய ஞானத்துடன் செயல்படுபவன் தனது பாவ விளைவுகள் அனைத்தையும் எரித்துவிடுகிறான். அவன் எல்லாச் செயல்களிலும் ஈடுபட்டிருந்தாலும், எந்தச் செயலையும்செய்வதில்லை. அவன்தனது மனதையும் அறிவையும் முழுமையாகக் கட்டுப்படுத்தி, உரிமையுணர்வின்றி, தானாக வரும் இலாபத்தில் திருப்தியுற்று, பொறாமையின்றி செயல்படுவதால், கர்ம வினைகளில் பாதிக்கப்படுவதில்லை. அவ்வாறு கிருஷ்ண உணர்வில் ஆழ்ந்திருப்பவன், நிச்சயமாக ஆன்மீக உலகை அடைவான்.

## திவ்ய ஞானத்திற்கு வழிவகுக்கும் யாகங்கள்

உன்னத அறிவைப் பெறுவதற்கு பல்வேறு யாகங்கள் உதவுகின்றன. சில யோகிகள் (கர்ம யோகிகள்) தேவ வழிபாடு என்னும் யாகத்தை செய்து படிப்படியான முன்னேற்றத்தை அடைகின்றனர். சிலர் (பிரம்மசாரிகள்) மனக்கட்டுப்பாடுஎன்னும் யாகத்தில் புலன்களையும் கேட்கும் முறையையும் அர்ப்பணிக்கின்றனர்.



எல்லாவித யாகங்களிலும் கிருஷ்ணரைப் பற்றிய ஞானமே மிகச்சிறந்த யாகமாகும். அதனை அறிய முறையான ஆன்மீக குருவிடம் சரணடைய வேண்டும்.

சிலர் (கிருஹஸ்தர்கள்) புலன்கள் என்னும் நெருப்பில் புலனுகர்ச்சிப் பொருள்களை அர்ப்பணிக்கின்றனர். சிலர் புலன்களையும் பிராணனையும் அடக்கப்பட்ட மனம் என்னும் யாகத்தில் அர்ப்பணிக்கின்றனர். வேறு சிலரோ, உடமைகளை தியாகம் செய்தல், கடுமையான தவங்கள், அஷ்டாங்க யோகப் பயிற்சி, வேதங்களைக் கற்றல் போன்ற யாகங்களைச் செய்கின்றனர். இத்தகு யாகங்களைப் பயிற்சி செய்வோர் அனைவரும்முன்னேற்றமடைகின்றனர்; ஆனால் தூய கிருஷ்ண உணர்வு என்பது இவையனைத்திற்கும் அப்பாற்பட்ட மிகவுயர்ந்த நிலையில் உள்ளது. இத்தகு யாகங்களால் கிருஷ்ண உணர்வை ஒருபோதும் அடைய முடியாது. கிருஷ்ணரின் கருணையாலும் தூய பக்தரின் கருணையாலுமே அதனை அடைய முடியும். இருப்பினும், படிப்படியான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் இந்த யாகங்கள் பக்தித் தொண்டின் படிக்கற்களாகும்.

ஞான யாகம் மற்ற யாகங்களைக் காட்டிலும் சிறந்தது. முறையான ஆன்மீக குருவை அணுகி இதுகுறித்த உண்மைகளை அறிய வேண்டும். அடக்கத்துடன் தொண்டு செய்து கேள்விகள் கேட்கப்படும்போது ஆன்மீக குரு தனது சீடனுக்கு ஞானத்தை வழங்குகிறார். அவ்வாறு ஞானத்தைப் பெற்றோர் ஒருபோதும் மயங்கமாட்டார்கள். ஞானத்தின் மூலமாக எல்லா உயிர்களையும் கிருஷ்ணரின் அம்சங்களாகக் காண முடியும்.

## திவ்ய ஞானத்தின் பெருமைகள்

ஒருவன் பாவிகளில் பெரும்பாவியாக இருந்தாலும், திவ்ய ஞானம் என்னும் படகில் ஏறிவிட்டால், துன்பக் கடலை கடந்துவிட முடியும். கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு விறகைச் சாம்பலாக்குவதுபோல ஞான நெருப்பானது ஜடச் செயல்களின் விளைவுகள் அனைத்தையும் சாம்பலாக்குகின்றது. கிருஷ்ணரைப் பற்றிய தெய்வீக ஞானத்தைப் போல சிறந்ததும் தூய்மையானதும் வேறொன்றும் இல்லை. இந்த ஞானத்தை அடைவதற்கு, நம்பிக்கை, அர்ப்பணிக்கப்பட்ட மனம், புலன் கட்டுப்பாடு ஆகியவை அவசியம். நம்பிக்கையின்றி சந்தேகம் கொள்ளும் நபர்கள் இறையுணர்வை அடைவதில்லை; சந்தேகம் கொள்வோர் இவ்வுலகிலும் சரி, மறுவுலகிலும் சரி, இன்பமடைவதில்லை. செயல்களுக்கான பலனைத் துறந்து பக்தித் தொண்டில் ஈடுபடுபவன் திவ்ய ஞானத்தினால் எல்லா சந்தேகங்களையும் நீக்க முடியும். அவன் செயல்களின் விளைவுகளால் பந்தப்படுவதில்லை. எனவே, அறியாமையினால் இதயத்தில் எழுந்த சந்தேகங்களை ஞானமெனும் ஆயுதத்தால் அழிக்க வேண்டும் என்று அர்ஜுனனுக்கு அறிவுறுத்திய ஸ்ரீ கிருஷ்ணர் யோகக் கவசம் பூண்டு எழுந்து போர்புரியும்படி கட்டளையிட்டார்.

## நான்காம் அத்தியாயத்தின் ஐந்து பகுதிகள்

**மூன்றாம் அத்தியாயத்துடனான தொடர்பு:** காமத்தை உன்னத அறிவினால் வெற்றிகொள்ள வேண்டும். (3.43)

**(1) கிருஷ்ணரைப் பற்றிய திவ்ய ஞானம் (4.1-10)**

- தெய்வீக ஞானம் பரம்பரை மூலமாகப் பெறப்பட வேண்டும்
- கீதையைப் பெறுவதற்கான தகுதிகள்—பக்தன், நண்பன்
- பிறப்பற்ற கிருஷ்ணர் தனது சுய வடிவில் தோன்றுகிறார்
- கிருஷ்ணர் தோன்றுவதற்கான காரணங்கள்—பக்தர்களைக் காத்தல், துஷ்டர்களை அழித்தல், தர்மத்தை நிலைநிறுத்துதல்
- கிருஷ்ணரின் திவ்ய நிலையை அறிபவர்களுக்கு மறுபிறவி இல்லை
- பற்றுதல், பயம், கோபம் ஆகியவற்றை விட்டொழிக்க வேண்டும்

**(2) தெய்வீக ஞானத்தை நடைமுறைப்படுத்துதல் (4.11-15)**

- சரணடைவதற்குத் தகுந்த பலனைப் பெற முடியும்
- குணம் மற்றும் கர்மத்தால் பிரிக்கப்படும் சமூகம்
- கிருஷ்ணர் இவற்றிற்கு அப்பாற்பட்டவர்

**(3) கர்மத்தை ஞானத்தின் தளத்திலிருந்து புரிந்துகொள்ளுதல் (4.16-24)**

- *கர்மம்*—வேதங்களின் அடிப்படையிலான செயல்கள்
- *விகர்மம்*—வேதங்களில் தடை செய்யப்பட்டுள்ள செயல்கள்
- *அகர்மம்*—விளைவுகளை ஏற்படுத்தாத செயல்கள் (பக்தித் தொண்டு)

**(4) திவ்ய ஞானத்திற்கு வழிவகுக்கும் யாகங்கள் (4.25-35)**

- பல்வேறு நபர்கள் பல தரப்பட்ட யாகங்களில் ஈடுபடுகின்றனர்
- கிருஷ்ணரைப் பற்றிய ஞானம் மற்ற எல்லா யாகங்களிலும் சிறந்தது
- அதுகுறித்து அறிய ஆன்மீக குருவை அணுக வேண்டும்

**(5) திவ்ய ஞானத்தின் பெருமைகள் (4.36-42)**

- துன்பக் கடலை எளிதில் கடக்கலாம்
- கர்ம விளைவுகள் அனைத்தும் சாம்பலாக்கப்படுகின்றன
- சந்தேகம் கொள்வோர் ஒருபோதும் இன்பமடைவதில்லை

*ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் வெளியீடு களுக்குத் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த ''பிரபுபாதர் நூற்றந்தாதி''. எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

## பகுதி 8

**அவரன்றி யாரும் அகிலம் அறிய**
**நவதீப நாயகன் நட்ட– நவநீதன்**
**சங்கீர்த் தனத்தினைச் சாதுரிய மாய்ச்சென்று**
**எங்கும் பரப்பிலர் ஏற்று. (85)**

பிரபுபாதர் அவர்களைத் தவிர வேறு எவரும் உலகம் அறிய நவதீபத்தின் நாயகரான சைதன்ய மஹாபிரபு ஏற்படுத்திய கிருஷ்ணரின் நாம சங்கீர்த்தனத்தை எங்கும் பரப்பவில்லை. குருவின் ஆணையை ஏற்று பிரபுபாதர் சிறப்பாகச் செய்தார்.

**ஏற்ற குருக்கடிதல் ஈடேற வென்றும்தான்**
**மாற்றம் பெறவென்று மற்பணித்து– ஆற்ற**
**முயன்றாள்வார் முன்னின்று முன்னேற வேண்டி**
**உயர்ந்து உணர்த்துதலும் உண்டு. (86)**

தான் ஏற்றுக் கொண்ட குருவின் கடிந்த சொற்கள், தான் ஈடேறுவதற்காக என்றும் மாற்றம் பெறுவதற்கே என்றும் உணர்ந்து ஒருவன் தன்னை அர்ப்பணித்துச் சிறப்பாகச் செயல்பட வேண்டும். குருவை விட்டு அகலாமல் முன்நின்று முன்னேற வேண்டும் என்பதற்காக உயர்ந்த கருத்துக்களை பிரபுபாதர் தனது சீடர்களுக்கு உணர்த்துதல் உண்டு.

**உண்டு நுணுக்கமாய் உன்னித்தல் ஊழியம்**
**தொண்டர் முனைந்து தொடர்கையிற்– கண்டித்தல்**
**உண்டு தவறிடின், உய்யத்தான் தீங்காதல்**
**மண்ணுண்டான் மாட்டு மிகுந்து. (87)**

சீடர்கள் தொண்டு செய்யும் பொழுது எப்படிச் செய்கிறார்கள் என்று பிரபுபாதர் நுணுக்கமாக கவனித்தல் உண்டு. தவறு செய்த இடத்தில் கண்டித்தலும் உண்டு. இவையெல்லாம் கிருஷ்ணருக்குச் சிறப்பான தொண்டு செய்து அவர்பால் இனிமையான காதல் கொண்டு வாழ்வின் உன்னதத்தை அடைவதற்குத்தான்.

**மிகுந்தபெரும் செல்வத்து மேற்கத்து நாட்டார்**
**உகந்தபெரும் தொண்டிற் குதவி– புகுந்தபெரும்**
**பாரதத்தின் கண்ணாய பக்திக் கலைபெருக்கி**
**ஆரதித்தல் வேண்டுமென்றார் ஆழ்ந்து. (88)**

பெரும் செல்வமுடைய மேலை நாட்டவர்கள் செய்தற்கு உகந்த சங்கீர்த்தனம் என்னும் பக்தித் தொண்டிற்கு உதவ வேண்டும். அவர்கள் நாட்டில் புகுந்துள்ள, பாரதத்தின் கண்போன்ற இப்பக்திக் கலையை வளர்த்து, கண்ணனை ஆராதித்தல் வேண்டுமென்று பக்தியில் ஆழ்ந்து கூறினார்.

**ஆழ்ந்துயர் ஆமேய்ப்பான் தத்துவம் ஆய்ந்தவர்**
**வாழ்வர் குருவாய், வழிகொள்வீர்– தாழ்வின்றி**
**ஆசிரமம் பாராது ஆன்மீகத் தொண்டேற்பீர்**
**தூசிக்கா தீரென்றார் தோய்ந்து. (89)**

பக்தியில் ஆழ்ந்து, கிருஷ்ணரின் தத்துவம் ஆராய்ந்தவர் குருவாக வாழ்வார், அவருடைய வழியைப் பின்பற்றுங்கள் என்றார். அவர் என்ன ஆசிரமத்தில் உள்ளார் என்பது பாராமல் அவரின்கீழ்த் தொண்டேற்பீர், மேலும் ஒருவர் மேல் மற்றொருவர் புழுதியை வாரி வீசாதீர் என்று கூறிச் சீடருடன் கலந்து நின்றார்.

**தோய்ந்துசங் கீர்த்தனத்துள் தொய்வின்றிக் கோட்டித்து**
**வேய்ங்குழல் மாதவனை வேட்டாடி– ஓய்வின்றிக்**
**காய்கின்ற மாயையின் கட்டினை மீறுதற்கு**
**வாய்மலர்ந்தார் வேதாந்தர் வென்று. (90)**



*சீடர்கள் கிருஷ்ணருக்கு முறையாக சேவை செய்ய வேண்டும் என்பதில் கண்டிப்புடன் திகழ்ந்த ஸ்ரீல பிரபுபாதர்*

தன்னுடைய வயதான காலத்திலும் சங்கீர்த்தனத்துள் தோய்ந்து தளர்தலின்றி ஆரவாரித்து, இனிய குழலை உடைய மாதவனை விரும்பி ஆடினார். ஓய்தல் இல்லாமல் கொடுமைப்படுத்துகின்ற மாயையின் கட்டிலிருந்து நாம் மீள்வதற்கு, அதனை வென்று, நமக்கு வாய்மலர்ந்து உபதேசம் செய்தார்.

**வென்றிடுவீர் எத்திக்கும் வெற்புடையான் பேர்பாடி**
**சென்றிடுவீர் இல்லம்நூற் சேர்த்திடக்- கன்றுடையான்**
**முன்சென்று காப்பான் முனைவீர் கடிதென்றார்**
**புன்மைசாற் பூதம் விடற்கு. (91)**

கோவர்த்தன மலையையுடைய கிருஷ்ணரின் பேர்பாடி எல்லாத் திக்குகளையும் வென்றிடுவீர். எல்லோருடைய இல்லங்களுக்கும் சென்று நூல்கள் சேர்ப்பீர். கன்றுகளையுடையவன் நமக்கு முன்பாகச் சென்று நம்மைக் காப்பான். இந்த துன்பம் மிகும் பொருளுலகில் இருந்து விடுபடுவதற்கு விரைந்து ஈடுபடுங்கள் என்றார்.

**விடற்கு வருந்தாதீர் வீணுடம்பை, வீழ்வீர்**
**விடப்பாம்பை வென்றான்வேள் விக்குத்- திடமொடு**
**சொல்லிவைத்தேன் யானென்றார் சோபிக்கும் வல்லமைக்கு**
**அல்லல்தீர் இல்லம் அடைந்து. (92)**


இந்த வீணுடம்பை விடுவதற்கு வருந்தக் கூடாது. காளிய நாகத்தை வென்றவனுடைய யக்ஞத்தில் ஆவலுடன் ஈடுபட வேண்டும். உறுதியாகச் சொல்கிறேன், இது ஒருவருடைய வாழ்வை அழகுபடுத்தும் என்றார். இவ்வாறு உலக மக்களுக்கு எடுத்துக்கூறி, துன்பம் தீர்க்கும் இடமான விருந்தாவனம் அடைந்தார்.

**அடைந்தவர் தம்பேர் அமைப்பினைக் காக்கப்**
**படையொடு பத்திரம் ஆக்கி- விடையொடு**
**மீண்டும் கடந்து மிதித்தார்மேல் நாட்டினைத்**
**தூண்டும்தொண் டர்க்காய்த் துணிந்து. (93)**

விருந்தாவனம் வந்தடைந்த பிரபுபாதர் அவர்கள் தம்முடைய பெரிய அமைப்பினைக் காக்கத் தன்னுடைய மூத்த சீடர்களுடன் சேர்ந்து தகுந்த பத்திரங்களை உருவாக்கினார். அவர்களுடைய ஆலோசனை மற்றும் அனுமதியுடன், வெளிநாடுகளில் உள்ள தொண்டர்களின் தூண்டுதலால், மீண்டும் ஒருமுறை மேல்நாடுகளுக்குப் பயணம் செய்தார்.

**துணிந்தொருவர் சென்று துலுக்கர்தம் நாட்டிற்**
**பணிந்துப தேசங்கள் பண்ணின்- பணிந்தவர்**
**பாதத்தின் தூளியைப் பற்றுவே னென்றார்நம்**
**காதலைக் கூட்டிக் கலந்து. (94)**

யாரொருவர் துணிவுடன் முகமதியர் நாடுகளுக்குச் சென்று பணிவுடன் கிருஷ்ண உபதேசம் செய்கின்றாரோ, அவருடைய பாதத் தூளியை நான் ஏற்றுக் கொள்வேன் என்றார். இத்தகைய பண்பு, பிரபுபாதர் அவர்கள்மேல் உள்ள பிரியத்தை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்கிறது.



தனது முதிர்ந்த வயதிலும் சீடர்களின் வேண்டுகோளின்படி உலகப் பயணம் மேற்கொண்ட ஸ்ரீல பிரபுபாதர்.

**கலந்துதம் சீடரொடு கண்ணீரும் மல்கி**
**மலர்ந்தபெரும் உள்ளத்தால் மாண்டு- குலம்தரும்**
**ஆசானை வாழ்த்தி அவதா ரியைக்காட்டிப்**
**பேசா திருந்திலர், போற்றி. (95)**

சீடரொடு கலந்து, கண்ணன் உணர்வில் கண்ணீர் மல்கி, மலர்ந்த உள்ளத்தவராய் உயர்ந்து நின்றார். சம்பிரதாயத்தில் தன்னை ஏற்றுக்கொண்ட ஆன்மீக ஆசானை வாழ்த்தி, அவதாரங்களுக்குக் காரணமான கிருஷ்ணரைக் காட்டிப் போற்றிப் பேசாமல் சிறிது நேரமும் இருந்தது இல்லை.

**போற்றுவம் தூதரைப் பொன்னடியிற் பூவிட்டுச்**
**சாற்றுவம் மாவீரர் சாதனைகட்- போற்றுமிறை**
**கண்ணனின் ஒப்பறுங் காதலை யுட்புகட்டும்**
**வண்ணவே தாந்தரே வாழ்வு. (96)**

கிருஷ்ணரின் ஒப்பற்ற தூதுவரான பிரபுபாதர் அவர்களின் பொற்பாதங்களில் பூவிட்டுப் போற்றுவோம். மாவீரரின் சாதனைகளைப் பறைசாற்றுவோம். பெரும் ஆச்சாரியர்கள், நாரதர், வியாசர் போன்ற மகாஜனங்கள் மற்றும் ஆழ்வார்கள் போற்றுகின்ற முழுமுதற் கடவுள் கிருஷ்ணரின் ஒப்பறுங் காதலை நமக்குள் புகட்டுகின்ற, சிறந்த ஆச்சாரியர் வேதாந்தர் அவர்களே நமக்கு வாழ்வு. (அடுத்த இதழில் இறுதிப் பகுதி)

*தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.*

## வாசகர் கடிதங்கள்

### கிரிக்கெட் காய்ச்சல் அற்புதம்

மார்ச் இதழில் வெளிவந்த கிரிக்கெட் காய்ச்சல் என்னும் கட்டுரை மிகவும் அற்புதமாக இருந்தது. தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றாற்போல எழுதப்பட்ட அக்கட்டுரையின் மூலம் எனது குழந்தைகளை என்னால் திருத்த முடிந்தது. இக்கட்டுரையை எழுதியவர் ஒரு மருத்துவ கல்லூரியின் இணை பேராசிரியர் என்பதை அறிந்த எனது குழந்தைகள், இஸ்கானில் இருப்பவர்கள் வெளியுலகத்திலும் பணியாற்றக்கூடியவர்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, இதில் மேலும் ஆர்வம் காட்டுகின்றனர். தொடர்ந்து இதுபோன்ற கட்டுரைகளை வெளியிட்டு எங்களுக்கு உதவுங்கள். (சுபத்ரா, சேலம்)

### சந்தேகங்களைப் போக்கும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

தாங்கள் அனுப்பும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை தொடர்ந்து கிடைக்கின்றது, மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த புத்தகத்தைப் படிக்கும்பொழுது நம்மையே மறக்கும் அளவிற்கு பல்வேறு செய்திகளை தெரிந்துகொள்வதோடு முழுமையான மன அமைதி கிடைக்கின்றது. இந்த புத்தகத்தைத் தொடர்ந்து படிப்பவர்களுக்கு சிறந்த எண்ணங்கள் தோன்றும், ஆன்மீக சந்தேகங்கள் விலகும், வாழ்க்கையில் எல்லா அம்சங்களும் கிடைக்கும் என்பது உண்மை. திருவண்ணாமலையில் இஸ்கான் கோவில் அமைக்க தாங்கள் முயற்சி செய்ய வேண்டுகிறேன். நன்றி, வணக்கம். (S.குணசேகரன், வட்டச் செயலாளர், பாரதீய ஜனதா கட்சி, திருவண்ணாமலை)

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.




# விஞ்ஞானிகள்— முன்னேறிய அசுரர்கள்

**பின்வரும் உரையாடல் தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் அவருடைய சீடர்கள் சிலருக்கும் இடையில் 1976ஆம் ஆண்டு, ஜனவரி 16அன்று மாயாபூரில் நடைபெற்றதாகும்.**

**ஸ்ரீல பிரபுபாதர்:** மனிதன் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிக்காவிடில், அவன் முட்டாளாகவே இருப்பான்.

**சீடர்:** ஸ்ரீல பிரபுபாதரே, இறுதியாகப் பார்த்தால் வேதங்களுக்கு அப்பாற்பட்டுள்ள எதுவும் உண்மையான அறிவல்ல. அப்படித் தானே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. அதில் அறிவின் சில துளிகள் இருக்கலாம். ஆனால் பூரண அறிவை விரும்புபவன் ஸ்ரீமத் பாகவதத்தை கண்டிப்பாகப் படிக்க வேண்டும். அதில் பகவான் மற்றும் அவரது பக்தர்களின் லீலைகளும் அன்புப் பரிமாற்றங்களும் உள்ளன. அ,ஆ,இ,ஈ என்னும் ஆரம்பக் கல்வியாகக் கருதப்படும் பகவத் கீதையைப் படிப்பதால், ஜடத்தையும் ஆன்மீகத்தையும் வேறுபடுத்திக் காணலாம். அதன் பின்னர், நீங்கள் பாகவதத்தைப் படிக்க வேண்டும்.

முந்தைய காலக்கட்டத்தில் சமுதாயத்தின் பெருந்தலைவர்கள் அனைவரும் இவ்வெல்லா விஷயங்களையும் அறிந்திருந்தனர், இதற்கான கல்வி எல்லோருக்கும் வழங்கப்பட்டது. ஆனால் தற்போதைய நிலை என்னவெனில், *அந்த யதாந்தை:*, வாய் கிழியப் பேசும் பெரிய குருடன் பல்வேறு சிறிய குருடர்களை வழிநடத்தி சாக்கடையில் விழ வைக்கின்றான். பெரிய தலைவர் என்று சிலர் புகழ் பெறுகின்றனர்—மக்களைத் தவறாக வழிகாட்டுவதில் அவர்கள் பெரியவர்களே—இத்தலைவர்களால் மக்கள் தங்களது வாழ்வைப் பாழாக்கிக் கொள்கின்றார்கள். அந்த பெரியத் தலைவனால் தன்னையே காப்பாற்றிக் கொள்ள இயலாது. அவன் தன்னைச் சீரழித்துக் கொள்வது மட்டுமின்றி மற்றவர்களையும் அருமையாக சீரழிக்கின்றான்.



**சீடர்:** ஸ்ரீல பிரபுபாதரே, இத்தகு குருட்டுத்தனமானத் தலைவர்கள் பல்வேறு குழப்பங்களை உண்டாக்கியுள்ளனர். மக்களின் மனம் பெருமளவில் சஞ்சலமடைந்துள்ளது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** தெய்வீக மன அமைதியை ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து நம்மால் அளிக்க முடியும். முதலில் அவர்கள் எவ்வாறு ஆன்மீக உலகை விட்டு வந்தனர் என்பதையும் எவ்வாறு ஜடத்தினால் கவரப்பட்டுள்ளனர் என்பதையும் விஞ் ஞானப்பூர்வமாக ஒவ்வொருவருக்கும் காண்பிக்க வேண்டும்.

ஆன்மீக உலகில் பூரண ஞானத்துடன் வாழ்ந்து வந்த ஜீவன்கள் தற்போது அறியாமையில் வாழ்ந்து வருகின்றன என்பதை எடுத்துரைக்க வேண்டும். அத்தகு ஜீவன்களில் சில மரங்களாகவும் செடிகொடிகளாகவும் நின்று கொண்டுள்ளன; வேறு சில ஜீவன்கள், பூச்சிகள், மிருகங்கள், மனிதர்கள் என்று இடம்பெயர்கின்றன. இந்த விஞ்ஞானப்பூர்வமான அறிவு ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ளது. ஆனால் போலியான தற்போதைய நாகரிகத்தில், ஜீவாத்மா எவ்வாறு ஜட உடல்களால் சூழப்பட்டுள்ளான் என்பதற்கான விஞ்ஞானப்பூர்வமான அறிவு உள்ளதா? அஃது இல்லாதபட்சத்தில் உங்களுடைய அறிவின் மதிப்பு என்ன? இந்த அடிப்படையான விஷயங்களை அறியாத தங்களின் அறிவினால் என்ன பலன்? உங்களுடையப் பார்வை அனைத்தும் மேலோட்டமாகவே உள்ளது என்பதை இது காட்டுகின்றது.

இருப்பினும் நல்லதொரு நம்பிக்கைப் புலப்படுகின்றது. மக்கள் நமது புத்தகங்களை ஆர்வத்துடன் வாங்குகின்றனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஸ்ரீமத் பாகவதத்தை பிரச்சாரம் செய்வதற்கான வகுப்புகளை நாம் தொடர்ச்சியாக நடத்த வேண்டும். மக்கள் பகவத் கீதையையும் பாகவதத்தையும் படிக்கட்டும்; அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வர். அவர்கள் முட்டாள்கள் அல்ல. இந்த மிகச்சிறந்த விஞ்ஞானத்தை நாம் அறிமுகப்படுத்தினால் போதும். மக்கள் முட்டாள்கள் அல்ல; தவறாக வழிநடத்தப்பட்டவர்கள். எனவே, அவர்களை வழிநடத்தும் பொறுப்பை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; அதன் பின்னர் இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் வெற்றியடையும். மக்கள் இதன் மதிப்பைச் சரியாகப் புரிந்துகொள்வார்கள்; அவர்கள் இதனை நிச்சயம் ஏற்றுக் கொள்வர். கிருஷ்ண பக்தியினால் சீர்திருத்தப்பட்ட பின்னர், அவர்களின் வாழ்க்கை வெற்றியடையும்.

**இந்த விஞ்ஞானிகளின் அறிவை மாய சக்தியானது பூரணமாக அபகரித்து விட்டது. மாயை இந்த விஞ்ஞானிகளை அயோக்கியர்களாகவும் மூடர்களாகவும் மாற்றி விட்டாள்; ஆனால் அவர்களோ வளர்ச்சிபெற்ற அறிவுடன் கூடிய பெரிய மனிதர்களைப் போன்று நடித்துக் கொண்டுள்ளனர்.**

ஆனால் அவர்கள் தங்களது புத்திசாலித்தனத்தைக் கருவிலுள்ள குழந்தையைக் கொல்வதற்கான சிறப்பான வழிகளைக் கண்டுபிடிப்பதில் செலவிடுகின்றனர். மேலும், "கருவிலுள்ள குழந்தைக்கு ஆத்மா இல்லை, பிறப்பிற்குப் பின்பே ஆத்மா வருகின்றது" என்று பறைசாற்றுகின்றனர்—என்னே அபத்தம்! கருவிலுள்ள குழந்தைக்கு ஆத்மா இல்லையேல், உயிரின் அறிகுறிகளை அக்குழந்தையால் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்?

**சீடர்:** நல்லது, ஸ்ரீல பிரபுபாதரே, கருவிலுள்ள குழந்தையின் வளர்ச்சியை வைத்து அங்கு ஆத்மா இருப்பதை எளிதில் அறிந்துகொள்ளலாமே!

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆமாம். கருவை விட்டு குழந்தை வெளியே வந்தவுடன் நாம் எத்தகைய வளர்ச்சியை அக்குழந்தையிடம் காண்கின்றோமோ, அதே போன்ற வளர்ச்சி தொடக்கத்திலிருந்தே கருப்பையினுள் நடைபெறுகிறது. ஜடவுடல் அங்கும் வளர்ச்சி யடைகிறது. கருவிற்கு வெளியிலுள்ள குழந்தைக்கு ஆத்மா உள்ளது என்பதை அனைவரும் அறிவர். ஆகையால் கருவிலுள்ள குழந்தைக்கு ஆத்மா இல்லை என்று எவ்வாறு கூற முடியும்? கருவிலுள்ள குழந்தைக்கு ஆத்மா இல்லையேல், அதன் உடல் எவ்வாறு வளர்ச்சியடைகிறது? இதை அறியாத அயோக்கியர்கள், பெரிய விஞ்ஞானிகள் என்ற பெயரில் நடமாடுகின்றனர்.

கருவிலுள்ள குழந்தைக்கு ஆத்மா இல்லை என்னும் எண்ணத்திற்கு அவர்கள் எந்த காரணத்தை முன் வைக்கின்றனர்?

**சீடர்:** உண்மையில் அவர்களிடம் இதற்கான வாதம் எதுவும் இல்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பாருங்கள்! அனைத்தும் பிடிவாதக் கருத்துகளே. கர்வத்துடன் கூடிய முட்டாள்தனத்தினால் அவர்கள் தங்களது கருத்துகளைப் பரப்பி வருகிறார்கள். விஞ்ஞானம் என்ற பெயரில் இது நடைபெற்று வருகிறது. உண்மையான விஞ்ஞானத்தை நாம் தெளிவாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

*விக்ஞான* என்னும் சொல், *வி, க்ஞான* என்னும் இரு சொற்களின் கலவையாகும். விஞ்ஞானம் என்பதற்கு இரு பொருள்கள் உண்டு: முதல் பொருள், *விசிஷ்டா-க்ஞான,* அல்லது பூரணமாக உணரப்பட்ட தெளிவான ஞானம்; அடுத்த பொருள், *விகத-க்ஞான,* அல்லது போலித்தனமான ஞானம், மாயையினால் கவரப்பட்ட ஞானம்.

எனவே, இந்த விஞ்ஞானிகளின் விஞ்ஞானம், *விகத ஞானமாகும்*—மாயையால் கவரப்பட்ட ஞானம்—உண்மை யான அறிவு ஏதும் இல்லாத பெயரளவிலான ஞானம். இது பகவத் கீதையில் கொடுக்கப்பட்டுள்ளது. *மாயயாபஹ்ருத-க்ஞான:* இந்த விஞ்ஞானிகளின் அறிவை மாய சக்தியானது பூரணமாக அபகரித்து விட்டது. இருப்பினும், அவர்களின் அறிவு, விஞ்ஞானம் என்ற பெயரில் போய்க் கொண்டிருக்கிறது. மாயை இந்த விஞ்ஞானிகளை அயோக்கியர்களாகவும் மூடர்களாகவும் மாற்றி விட்டாள்; ஆனால் அவர்களோ வளர்ச்சிபெற்ற அறிவுடன் கூடிய பெரிய மனிதர்களைப் போன்று நடித்துக் கொண்டுள்ளனர். இதுவே ஏமாற்றும் குணம்—கலி யுகத்தின் குறைபாடு.

**சீடர்:** முன்னேறிய ஞானம், ஆனால் அசுரத்தனமான ஞானம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆமாம். முன்னேற்றம் அடைந்த அசுரர்கள், *ஆஸுரம்-பாவம் ஆஷ்ரிதா:,* "கடவுள் இல்லை" என்னும் நாத்திகத் தன்மையினால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**சீடர்:** உண்மையே. இந்தப் பெயரளவு விஞ்ஞானிகளிடம் ஒரு திறமை உண்டு: நீங்கள் உண்மையானப் பிரச்சனைகள் குறித்துக் கேள்வி எழுப்பினால், அதை எவ்வாறு தவிர்ப்பது என்னும் விஞ்ஞானம் அவர்களுக்குத் தெரியும். அவ்விதத்தில் அவர்கள் உண்மையில் கெட்டிக்காரர்களே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஒரு குழந்தையால்கூட தனது உண்மையான பிரச்சனைகளைத் தவிர்க்க முடியும். அது திறமையே அல்ல. வழிகாட்டப்படாத குழந்தைகூட தனது முட்டாள்தனத்தில் சிறப்பாக முன்னேற்றமடையலாம். அந்த முட்டாள் குழந்தை நெருப்பைத் தொட்டு தனது கையைச் சுட்டுக் கொண்டால், "ஓ! இதுவே அறிவின் முன்னேற்றம்" என்று மற்றொரு முட்டாள் கூறலாம்.

அதுபோலவே ஜடவுலகத்திலுள்ள இந்த அயோக்கியர்கள் அனைவரும் தங்களின் முட்டாள்தனமான அறிவை வளர்த்துக் கொள்ள சிரத்தையுடன் முயற்சி செய்து வருகிறார்கள். பழங்கால அசுரனான ஹிரண்யகசிபுவின் அடிச்சுவடுகளை இவர்கள் பின்பற்றுகிறார்கள். ஆத்மாவையும் பரமாத்மாவையும் உதாசீனப்படுத்திவிட்டு, ஜடவுடலை மரணமின்றி பாதுகாக்க அவன் முயற்சி செய்தான்; அது சாத்தியமல்ல. ஆனால் இன்றைய முட்டாள் விஞ்ஞானிகளும் ஹிரண்யகசிபுவைப் போலவே முட்டாள்தனத்தில் மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)

# கோவையில் என்விரோ 2011






கோயம்புத்தூர், மார்ச் 11, 2011: இஸ்கான் கோயம்புத்தூரின் பக்திவேதாந்த அகடமியின் சார்பில், தட்பவெப்ப மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் குறித்து இளைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, என்விரோ 2011 என்ற பெயரில் PSG கல்லூரியில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற IPCC சேர்மன் Dr ராஜேந்திர குமார் பச்சோரி தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். பக்திவேதாந்த அகாடமியின் இயக்குநரும் இஸ்கான் கோயம்புத்தூரின் தலைவருமான தவத்திரு பக்திவினோத ஸ்வாமி உட்பட பலரும் உரையாற்றினர்.

புவி வெப்பமாகுதல், உணவுப் பற்றாக்குறை உட்பட இதர சமுதாயப் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டிய திரு. ராஜேந்திர பச்சோரி இளைஞர்கள் தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளும்படி அறிவுறுத்தினார். தவத்திரு பக்திவினோத ஸ்வாமி தனது உரையில், புவியியல் பிரச்சனை அனைத்திற்கும் தவறாக வழிநடத்தப்படும் நவீன கல்வி முறையே காரணம் என்றும், எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனையும் என்னும் வேத வழிமுறை இவ்வெல்லாப் பிரச்சனைகளுக்கும் நிரந்தர தீர்வளிக்கும், என்றும் கூறினார்.

கருத்தரங்கில் 900க்கும் மேற்பட்ட மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

## பசுவதையும் எதிர்வினைகளும்



**ஸ்ரீல பிரபுபாதர்:** எல்லா இடங்களிலும் பசுக்கள் உள்ளன; மக்கள் அவற்றைக் கொன்று உண்கின்றனர். மனித நாகரிகம் இன்றைக்கு இப்படிப்பட்ட நெருக்கடியில் சிக்கியிருப்பதற்கு இதுவே காரணம். பசுவதைக்கான எதிர்விளைவுகளைத் தற்போதைய சமுதாயம் அனுபவித்துக் கொண்டுள்ளது. இன்னும் பற்பல விளைவுகளை அவர்கள் அனுபவிப்பர். (ஸ்ரீல பிரபுபாதர் லீலாம்ருதத்திலிருந்து)

பசுவிடமிருந்து நாம் பால் அருந்துவதால், அவள் தாய் என்று அழைக்கப்படுகிறாள். பால் இல்லாமல் நம்மால் வாழ இயலுமா? தினசரி காலை வேளையில் பால் நமக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது. பாலை வழங்குபவள் நமக்குத் தாயல்லவா! அந்த தாயைக் கொல்லும் செயல் அறிவுடைய செயலா? தாயைக் கொல்லும் சமுதாயம் முறையான சமுதாயமா? அத்தகைய சமுதாயத்தில் மக்கள் மகிழ்ச்சியை விரும்புகின்றனரே, அஃது எப்படி சாத்தியம்? பசுவதையின் காரணத்தினால்தான் பலதரப்பட்ட இயற்கைச் சீற்றங்கள், போர் போன்றவை நடைபெற்று, மக்கள் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படுகின்றனர். (ஜுன் 14, 1976, டெட்ராய்ட்டில் நடைபெற்ற உரையாடலில் ஸ்ரீல பிரபுபாதர் கூறியது)

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### அத்தியாயம் இரண்டு, ஸ்லோகம் 3

(பொருளுரையின் தொடர்ச்சி) ஸ்ரீமத் பாகவதம், வேதாந்த சூத்திரத்தின் மீதான தன்னிகரற்ற வியாக்கியானமாகும். இயற்கையான இந்த வியாக்கியானத்தை விட தன்னால் சிறப்பாக எழுத முடியாது என்பதை ஸ்ரீபாத சங்கராசாரியர் அறிந்திருந்ததால், ஸ்ரீமத் பாகவதத்தினை அவர் தொடவில்லை. அவர் தமது "ஷாரீரக-பாஷ்யத்தை" எழுதினார், அவரைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்வோர் பாகவதத்தை ஏதோ ஒரு புதிய நூலாகக் கருதி நிராகரிக்கின்றனர். மாயாவாதப் பிரிவினரின் பாகவதத்திற்கு எதிரான இத்தகைய பிரசாரத்தால் ஒருவர் வழிதவறிவிடக் கூடாது. இந்த அறிமுக ஸ்லோகத்திலிருந்து, ஸ்ரீமத் பாகவதம், பொறாமை என்னும் பௌதிக நோயிலிருந்து பூரணமாக விடுபட்ட பரமஹம்சர்கள் படிப்பதற்கேற்ற ஒரே ஆன்மீக நூல் என்பதை ஆரம்ப நிலை மாணவன் அறிய வேண்டும். புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் நாராயணர் பௌதிகப் படைப்பிற்கு அப்பாற்பட்டவர் என்பதை ஸ்ரீபாத சங்கராசாரியர் ஏற்றுக் கொண்டுள்ளபோதிலும், மாயாவாதிகள் புருஷோத்தமரின் மீது பொறாமை கொண்டவர்களாக உள்ளனர். இத்தகு பொறாமை கொண்ட மாயாவாதிகளால் பாகவதத்தை அணுக முடியாது. ஆனால் பௌதிக வாழ்விலிருந்து வெளியேறுவதில் உண்மையான ஆர்வம் கொண்டுள்ளவர்கள் இந்த பாகவதத்தில் தஞ்சமடையலாம்; ஏனெனில், முக்தி பெற்றவரான ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியால் இது பேசப்பட்டதாகும். இது, பிரம்மன், பரமாத்மா, பகவான் என உணரப்படும் திவ்யமான பரம்பொருளைப் பக்குவமாகக் காண்பதற்கு உதவும் தெய்வீகமான ஞான ஒளியாகும்.

### ஸ்லோகம் 4

நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம்
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயம் உதீரயேத்

### மொழிபெயர்ப்பு

வெற்றி பெறுவதற்கு உதவும் இந்த மிகச்சிறந்த ஸ்ரீமத் பாகவதத்தை பாராயணம் செய்வதற்கு முன்பாக, பரம புருஷராகிய நாராயணருக்கும், மனிதரில் உத்தமரான நர நாராயண ரிஷிக்கும், கல்விக்கு அதிபதியாகத் திகழும் அன்னை சரஸ்வதிக்கும், ஆசிரியராகிய ஸ்ரீல வியாஸதேவருக்கும் ஒருவர் தனது மரியாதைக்குரிய வணக்கங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

### பொருளுரை

எல்லா வேத இலக்கியங்களும் புராணங்களும், இருளடர்ந்த பௌதிக வாழ்வை வெற்றிகொள்வதற்கு உரித்தானவை. கற்பனைக்கெட்டாத காலந்தொட்டு பௌதிகப் புலனுகர்ச்சியில் பெரிதும் ஈர்க்கப்பட்டிருப்பதால், உயிர்வாழி, பகவானுடனான தனது உறவை மறந்த நிலையில் இருக்கிறான். பௌதிக உலகிலுள்ள அவனுடைய வாழ்க்கைப் போராட்டம் முடிவற்றதாகும், திட்டங்களைத் தீட்டி அதன்மூலம் அதிலிருந்து வெளியேற நினைப்பது அவனுக்குச் சாத்தியமானதல்ல. வாழ்வின் இந்த நிரந்தரப் போராட்டத்தை அவன் உண்மையிலேயே வெல்ல விரும்பினால், இறைவனுடனான தனது நித்திய உறவை அவன் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதற்கான வழியைப் பின்பற்ற விரும்புவோர் வேதங்கள், புராணங்கள் போன்ற இலக்கியங்களைத் தஞ்சமடைய வேண்டும். புராணங்களுக்கும் வேதங்களுக்கும் தொடர்பில்லை என்று மூடர்கள் கூறுகின்றனர். ஆனால் புராணங்களோ, வேதங்களைப் புரிந்துகொள்ள உதவும் விளக்க நூல்களாகும், இவை பலதரப்பட்ட மனிதர்களுக்குத் தகுந்தாற் போல கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா மனிதர்களும் சமமானவர்கள் அல்ல. மனிதர்களில் சிலர் ஸத்வ குணத்தினால் வழிநடத்தப்படுகின்றனர், வேறு சிலர் ரஜோ குணத்தின் கீழும், மற்றவர்கள் தமோ குணத்தின் கீழும் உள்ளனர். எத்தகு நிலையைச் சார்ந்த மனிதரும் நன்கு பயன்படுத்திக் கொண்டு, இழந்துபோன தங்களது உண்மையான நிலையை படிப்படியாகத் திரும்பப்பெற்று, வாழ்வின் கடினமானப் போராட்டத்திலிருந்து வெளியேற வாய்ப்பளிக்கும் வகையில் புராணங்கள் பகுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீல சூத கோஸ்வாமி புராணங்களை உச்சரிப்பதற்கான முறையைக் காட்டுகிறார். வேத இலக்கியங்களையும் புராணங்களையும் போதிக்க விரும்புவோர் இவ்வழியைப் பின்பற்றலாம். குறைவற்ற புராணமான ஸ்ரீமத் பாகவதம், பௌதிக பந்தத்திலிருந்து நிரந்தரமாக வெளியேற விருப்பம் கொண்டவர்களுக்கு உரித்தானதாகும்.

## ஸ்லோகம் 5

*முனய: ஸாது ப்ருஷ்டோ 'ஹம் பவத்பிர் லோக-மங்களம்*
*யத் க்ருத: க்ருஷ்ண-ஸம்ப்ரஷ்னோ யேனாத்மா ஸுப்ரஸீததி*

## மொழிபெயர்ப்பு

முனிவர்களே, நான் தங்களால் சரியான முறையில் கேள்வி கேட்கப்பட்டுள்ளேன்.உங்களுடைய கேள்விகள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றியவையாக இருப்பதால், அவை உலக நன்மையுடன் தொடர்பு கொண்டவையாகி, மதிப்புமிக்க கேள்விகளாக விளங்குகின்றன. இத்தகைய கேள்விகளால் மட்டுமே பூரண ஆத்ம திருப்தியைத் தர முடியும்.

## பொருளுரை

பாகவதத்திலிருந்து பூரண உண்மை அறியப்பட வேண்டும் என்று முன்பே கூறப்பட்டுள்ளதால், பூரண உண்மையான புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய நைமிஷாரண்ய முனிவர்களின் கேள்விகள், தகுதியும் நியாயமும் கொண்டவை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எல்லா வேதங்களிலும் தன்னைத் (பகவான் கிருஷ்ணரைத்) தேடி அலைவதற்குரிய தூண்டுதலைத் தவிர வேறொன்றுமில்லை என்று பகவத் கீதையில் (15.15) பரம புருஷர் கூறுகிறார். இவ்வாறாக, கிருஷ்ணரைப் பற்றிய கேள்விகள் எல்லா வேத விசாரணைகளுக்கும் சாரமாகத் திகழ்கின்றன.

முழு உலகமும் கேள்வி பதில்களால் நிறைந்துள்ளது. பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் என அனைவரும் இடைவிடாத கேள்வி பதில்களில் ஓயாமல் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். காலை நேரத்தில் கூடுகளிலுள்ள பறவைகள் கேள்வி பதில்களால் தீவிரமடைகின்றன, மாலை நேரத்தில் அப்பறவைகள் கூட்டிற்குத் திரும்பிவந்த பின்பும்கூட மீண்டும் கேள்வி பதில்களால் சுறுசுறுப்படைகின்றன. மனிதனோ இரவு நேரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலன்றி, பல விதமான கேள்வி பதில்களில் ஓயாமல் ஈடுபடுகிறான். சந்தையில் இருக்கும் வியாபாரிகளும் கேள்வி பதில்களில் சுறுசுறுப்பாக உள்ளனர். அதைப் போலவே நீதிமன்றத்திலுள்ள வழக்கறிஞர்களும், பள்ளி, கல்லூரிகளின் மாணவர்களும் தீவிரமாக உள்ளனர், நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட கேள்வி பதில்களில் ஓயாமல் ஈடுபட்டுள்ளனர், அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும்கூட இடைவிடாமல் கேள்வி பதில்களில் மூழ்கியுள்ளனர். வாழ்நாள் முழுவதும் இத்தகைய கேள்வி பதில்களில் அவர்கள் மூழ்கியிருப்பினும், இதனால் அவர்கள் திருப்தியடைவதே இல்லை. கிருஷ்ணரைப் பற்றிய கேள்வி பதில்களால் மட்டுமே ஆத்ம திருப்தியை அடைய முடியும்.

கிருஷ்ணரே நமது மிக நெருங்கிய எஜமானரும், நண்பரும், தந்தை அல்லது மகனும், மற்றும் காதலரும் ஆவார். கிருஷ்ணரை மறந்து, பற்பல கேள்வி பதில்களுக்குரிய விஷயங்களை நாம் உருவாக்கியுள்ளோம், ஆனால் அவற்றில் எதுவும் நமக்கு முழு திருப்தியை அளிக்கக்கூடியவை அல்ல. கிருஷ்ணரைத் தவிர மற்றெல்லா பொருட்களுமே தற்காலிகமான திருப்தியை மட்டுமே அளிக்கக்கூடியவை என்பதால், பூரண திருப்தியைப் பெற கிருஷ்ணரைப் பற்றிய கேள்வி பதில்களில் நாம் ஈடுபட வேண்டும். கேள்வி கேட்கப்படாமலோ பதிலளிக்காமலோ ஒரு நொடிப் பொழுதும் நம்மால் வாழ முடியாது. ஸ்ரீமத் பாகவதம் கிருஷ்ணருடன் தொடர்புடைய கேள்வி பதில்களைக் கொண்டிருப்பதால், தெய்வீகமான இந்த இலக்கியத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் மட்டுமே மிகவுயர்ந்த திருப்தியை நம்மால் பெற முடியும். ஸ்ரீமத் பாகவதத்தை அவசியம் கற்க வேண்டும், அதன் மூலம் சமூகம், அரசியல் அல்லது சமய விவகாரங்களைப் பற்றிய எல்லாப் பிரச்சனைகளுக்கும் பூரணமான தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஸ்ரீமத் பாகவதமும் கிருஷ்ணருமே இருப்பவை அனைத்திற்கும் சாரமாக உள்ளனர். (தொடரும்)

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

### (ஏப்ரல் 1, 2011 முதல் மே 15, 2011 வரை)

### ஏப்ரல்

8, வெள்ளி, ஸ்ரீல இராமானுஜாசாரியர் தோன்றிய நாள்

12, செவ்வாய், ஸ்ரீ இராம நவமி, பகவான் ஸ்ரீ இராமர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

14, வியாழன், கமட ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:04–10:11

18, திங்கள், ஸ்ரீ சியாமானந்த பிரபு தோன்றிய நாள்

24, ஞாயிறு, ஸ்ரீ அபிராம தாகூர் மறைவு நாள்

27, புதன், ஸ்ரீல விருந்தாவன தாஸ தாகூர் மறைவு நாள்

28, வியாழன், வருதினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 09:57–10:07

### மே

3, செவ்வாய், ஸ்ரீ கதாதர பண்டிதர் தோன்றிய நாள்

12, வியாழன், ஸ்ரீமதி சீதா தேவி (ஸ்ரீ ராமசந்திரரின் துணைவியார்) தோன்றிய நாள், ஸ்ரீ மதுபண்டிதர் மறைவு நாள், ஸ்ரீமதி ஜானவா தேவி தோன்றிய நாள்

14, சனி, மோகினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:53–10:05
ஸ்ரீ ஜெயானந்த பிரபு மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.




மே மாதம் முதல் ‘‘ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்’’,
‘‘பகவத் தரிசனம்’’ என்று பெயர் மாற்றம்
செய்யப்படுகின்றது.




தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்:0452 2524553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி.
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553